விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 20 செவ்வாய்க்கிழமை (05.07.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 198

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## பராக் ஒபாமா கொல்லப்பட்டதாக வெளியான செய்தியால் பரபரப்பு



(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கொலை செய்யப்பட்டுள்ளதாக அமெரிக்காவின் பொக்ஸ் நியூஸ் தொலைக்காட்சியின் டுவிட்டர் செய்தி இணைப்பில் தெரிவிக்கப்பட்டிருந்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

டுவிட்டர் இணையத்தளத்தில் பொக்ஸ் நியூஸ் தொலைக்காட்சியின் பொக்ஸ் நியூஸ் பொலிட்டிக்ஸ் எனும் செய்தி இணைப்பிற்குள் சட்ட விரோதமாக ஊடுருவிய குழுவொன்றே வதந்தியை செய்தியாக பரப்பியுள்ளது.

ஆனால் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மீது இத்தகைய எந்த தாக்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாணத்தில் மீண்டும் பயங்கரவாதம்

### சரத் பொன்சேகா எச்சரிக்கை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்குவதற்கான சமிக்ஞைகள் தென்படுவதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா எச்சரித்துள்ளார்.

நேற்றுக்காலை கொழும்பு உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணைக்காக சிறைச்சாலை காவலர்களால் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்ட வேளை (20ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு கடவுச்சீட்டு உள்ளவர்கள்

# வடக்குக்கு வருவதற்கான பயணக் கட்டுப்பாடு நீக்கம்

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களை கொண்டுள்ளவர்கள் வடபகுதிக்கு வருவதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் நேற்று திங்கட்கிழமை முதல் நீக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. வடக்கிற்கு பயணம் செய்பவர்கள் பாதுகாப்பு அமைச்சிடமிருந்து பெற்ற பயண அனுமதி ஆவணங்களை ஓமந்தை சோதனைச்சாவடியில் காட்ட வேண்டிய தேவை இனிமேல் இல்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் இயல்பு நிலை ஏற்பட்டுள்ளதையடுத்து வெளிநாட்டுக் கடவுச்சீட்டு கொண்டவர்களுக்கான பயணக்கட்டுப்பாடு இனிமேல் தேவையில்லையெனக் கருதுகிறோம் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழினியின் விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகளின் முன்னாள் மகளிர் அணி பொறுப்பாளர் தமிழினியிடம் நீதிமன்ற அனுமதியின்றி பயங்கரவாத தடுப்புப்பிரிவு பொலிஸார் இரண்டு தடவைகள் விசாரணை நடத்தியுள்ளனர்.

தமிழினிக்கு எதிரான வழக்கு நேற்று கொழும்பு உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பிரஸ்தாப விடயம் (19ஆம் பக்கம் பார்க்க)

## ‘இராணுவ உடையில் புலிகள்’

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

சனல் 4 போலி வீடியோ ஆவணம் தொடர்பான பாதுகாப்பு அமைச்சும் நிபுணர்கள் குழுவும் இணைந்து புதிய ஆய்வொன்றினை ஆரம்பித்திருப்பதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல நேற்று முன்தினம் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சுக்கு கிடைக்கப் பெற்றிருக்கும் மேற்படி சனல் 4 வீடியோ ஆவணம் போலியாக சித்தரிக்கப்பட்டதென்பதற்கு தகுந்த ஆதாரங்கள் கிடைத்துள்ளன என்றும் அவர் கூறினார்.

திருத்தங்கள் மேற்கொள்ளப்படாத உண்மையான வீடியோ ஆவணத்தில் தோன்றும் நபர்களின் பேச்சுவார்த்தை தமிழிலேயே உள்ளது. இருப்பினும் அதற்குப் பதிலாக சிங்கள உரையாடல்களை மேற்படி வீடியோக் காட்சிக்கு பதிவு செய்துள்ளனர்.

வீடியோக் காட்சியில் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களே தோன்றுகின்றனர். இவர்கள் இராணுவத்தினரின் சீருடையில் காட்சியளிக்கின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார். விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டமையையடுத்து புலிகளுக்கு ஆதரவான குழுவினர் நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் சனல் 4 போலி வீடியோ ஆவணங்களை (20ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் மா அதிபராக இலங்கக்கோன் பதவியேற்பு

(கொழும்பு)

புதிய பொலிஸ்மா அதிபராக என்.கே. இலங்கக்கோன் நேற்று பதவியேற்றுள்ளார். பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்ற வைபவத்தில் 33ஆவது பொலிஸ்மா அதிபராக அவர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவ்வைபவத்தின் போது பொலிஸ் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் வழங்கப்பட்ட அணிவகுப்பு மரியாதையையும் அவர் ஏற்றுக் கொண்டார்.

1982ஆம் ஆண்டு பொலிஸ் துறையில் உதவி அத்தியட்சகராக இணைத்து கொண்ட இவர், இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் சிறப்பு அதிரடிப்படைப் பிரிவை வழி நடத்தியிருந்தார்.

1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ்ப்பாணம், (19ஆம் பக்கம் பார்க்க)



# வன்னி இறுதிப் போரின் போது ஒரு இலட்சம் மக்கள் கொலை

## உறுதிப்படுத்துகிறது சர்வதேசக் குழு

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது சுமார் ஒரு இலட்சம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபை குழு ஒன்றின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இப்போரின் போது காயமடைந்த சுமார் 14 ஆயிரம் பேர் போர் தவிர்ப்பு வலயத்திலிருந்து வெளியேற்றப்பட்டதாக செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக்குழு கணிப்பிட்டுள்ளது.

அத்துடன் இப்போரின் போது ஐயாயிரம் தமிழ் மக்கள் அவயவங்களை இழந்திருப்பதாகவும் 2008ஆம் ஆண்டில் சுமார் 70 ஆயிரம் பிள்ளைகள் போரின்போது உயிரிழந்துள்ளதாகவும் செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழு தெரிவித்துள்ளதாக ரைம்ஸ் ஒவ் இந்தியா பத்திரிகை தெரிவித்துள்ளது.

இப்புள்ளிவிபரங்களை பெங்களூர் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர் போல் நியூமன் சமர்ப்பித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கையிலிருந்து இந்தப்புள்ளி விபரங்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

டப்ளினின் நிரந்தர மக்கள் தீர்ப்பாய அறிக்கை மற்றும் நிபுணர்கள் குழு அறிக்கை என்பன தொடர்பாக சுருக்கமாகக் கருத்து தெரிவித்த போல் நியூமன் படைத்தரப்பினரால் மருத்துவமனைகள், பாடசாலைகள் இலக்கு வைத்து தாக்கப்பட்டுள்ளதாக இவ்வறிக்கைகள் உறுதிப்படுத்துகின்றன எனக் கூறியுள்ளார்.

அத்துடன் தமிழீழ விடுதலைப்புலிகளும் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியதாக அவர் கூறியுள்ளார்.



## சடலத்தைப் பொறுப்பேற்க அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த 2ஆம் திகதி அதிகாலை 12.40 மணிக்கு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட் குறித்த நபர் அதே நாள் 1.25 மணிக்கு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபரின் பெயர், முகவரி மற்றும் வயது என்பன குறிப்பிடப்படாத நிலையில் இச்சடலத்தை யாரும் இதுவரை உரிமை கோரவில்லை.

எனவே உரித்துடையோர் மூன்று நாட்களுக்குள் இச்சடலத்தைப் பொறுப்பேற்கும்படி யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய கேட்போர் கூட திறப்பு விழா நடைபெற்றது. இவ்வி[illegible]விற்கு விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதனையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் இணைந்து கே[illegible]போர் கூடத்தைத் திறந்து வைப்பதனையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: என்.குமார்)

## ஆறு மாதத்தின் பின் சந்தேகநபர் கைது

(சாவகச்சேரி)

திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஆறு மாதத்திற்குப் பின் கைது செய்யப்பட்டார்.

மீசாலை கிழக்கிலுள்ள வீடொன்றில் ஆட் களில்லாத சமயம் உட்புகுந்து 25 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்ற சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கடந்த ஜனவரி மாதம் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டது.

இச்சம்பவம் குறித்து சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்ட புலன்விசாரணையை அடுத்து கடந்த மாதம் 30ஆம் திகதி சந்தேக நபர் ஒருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நேற்றைய தினம் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது சந்தேகநபரை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டார். (ஸ்ரீ-29)

## விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் எதிரில் வந்த காருடன் மோதியதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 8.15 மணியளவில் மல்லாகம் பகுதியில் இடம்பெற்றது. இதில் அப்பகுதியைச் சேர்ந்த ஏ.துஸ்யந்தன் (வயது 40) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார். (ஸ்ரீ-4-6)

# சுதந்திரமான வாழ்க்கையையே வடக்கு மக்கள் விரும்புகின்றனர்

## இலங்கை வந்த மலேசிய எம்.பி விபரிப்பு

(கொழும்பு)

வடபகுதி மக்கள் இராணுவ நிர்வாகத்திடம் இருந்து முழுமையாக விடுபட்ட சுதந்திரமான ஒரு வாழ்வையே விரும்புவதாக மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் மனோகரன் தெரிவித்துள்ளார்

இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவுக்கு வந்து இருவருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் அங்கு தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதிலும் தமிழ் மக்களின் வாழ்வு நிலையை உயர்த்துவதிலும் சிறு முனைப்புகளே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோகரன், ஜோஹாரி அப்துல், செலங்கர் ஆளுநர் இராமகிருஷ்ணன் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின்இரு பிரதிநிதிகள் கொண்ட குழு கடந்த மாதம் ஐந்து நாள் பயணத்தை மேற்கொண்டு இலங்கைக்கு விஜயம் செய்திருந்தது.

இவர்கள் கொழும்பு, புத்தளம், வடபகுதி மற்றும் வடகிழக்குப் பகுதிகளுக்குச் சென்று போருக்குப் பின்னரான நிலைமைகளை அவதானித்துள்ளனர்.

மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் மனோகரன் தாம் எதிர்பார்த்த அளவுக்கு போரினால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு பெரிதாக எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அங்கு இயல்பு வாழ்க்கை தோற்றுவிக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் குடியியல் நடவடிக்கைகள் அனைத்தும் படைத்தரப்பின் கட்டுப்பாட்டின் கீழேயே இடம்பெறுகிறது. ஒவ்வொரு ஐம்பது மீற்றருக்கு இடையிலும் ஆயுதம் தரித்த படைத்தரப்பினர் நிற்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இலங்கையில் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுடன் நான் உரையாடிய போது அவர்கள் கூறியவை என்னை அதிர்ச்சிக்கு உள்ளாக்கின .

வடபகுதி மக்கள் பணத்தை கேட்கவில்லை இராணுவ நிர்வாக கட்டமைப்பிலிருந்து விடுபட்ட ஒரு சுதந்திரமான வாழ்க்கையையே கேட்கின்றனர்.

வடபகுதியில் குறைந்த அளவு ஆண்களே உள்ளனர். பெருமளவு ஆண்கள் போரின் போது உயிரிழந்தும் படைத்தரப்பால் தடுத்து வைக்கப்பட்டும் பாதுகாப்புக் கருதி நாட்டை விட்டு வெளியேறியும் உள்ளனர். அத்துடன் 9 ஆயிரம் தமிழ் இளைஞர்கள் குறித்து எவ்வித கணக்கும் இல்லை .

அரசாங்கத்தால் வடபகுதி சிங்கள பௌத்தமயமாக்கப்பட்டு அங்கு சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டு வருகின்றனர். சிங்கள மக்கள் வாழ்ந்த தமிழ் பிரதேசங்களில் அவர்கள் பௌத்த விகாரைகளை நிர்மாணித்து வருகின்றனர்.

எனது இலங்கை விஜயத்தின் போது தமிழ் சட்ட வல்லுநர்கள், அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நான் சந்தித்தேன்.

இவ்விவகாரங்கள் குறித்து அவர்களுடன் நான் உரையாடிய போது அவர்கள் தங்களால் எதுவும் செய்ய முடியாது எனக் கைவிரித்தனர். இவ்விவகாரங்கள் தொடர்பில் தாங்கள் குரல் எழுப்பினால் நாட்டுக்கு எதிரானவர்கள் என முத்திரை குத்தப்படுவார்கள் என அவர்கள் என்னிடம் கூறினார்கள் என்றார். (எ)

விற்பனைக்கு

சிறிய வீட்டுடன் 3 பரப்புக் காணி பாடசாலை லேன், ஆறுகால்மடத்தில் விற்பனைக்குண்டு.

LAND FOR SALE

(5490)

தொடர்பு 0714449212

தேவை

எமது ஸ்தாபனத்துக்கு ஒழுக்கமும் பண்பும் உள்ள புடவை வியாபாரம் பழகிய/ பழக விரும்பும் ஆண்/பெண் ஊழியர்கள் தேவை.

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்

41, பெரியகடை, யாழ்ப்பாணம். (மலாயன் கபே அருகில்)

(ஸ்ரீ-3651)

வடமராட்சியில் மகளிருக்கான பயிற்சிகளின் புதிய பிரிவு

◆ கேக் ஐசிங் ◆ ஃபேஷியல் ◆ மணப் பெண் ஒப்பனை

இரண்டு மாதங்கள் கொண்ட மேற்படி மகளிருக்கான பயிற்சிகளில் தனி ஒரு பயிற்சியிலும் கூட கலந்து கொள்ள முடியும்.

ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம்.



தூரிகை நுண்கலை வளாகம்

(சி-3648) ம.ம.வி. வீதி, நெல்லியடி

# இன்று ஒரு தகவல்

## பதவியும் பண்பும்

என்னுடன் படித்த ஒருவர் ஒருநாள் மிகவும் கவலையுடன் வந்தார்.

நான் அவரிடம்,"என்ன விடயம்?"என்று விசாரித்தேன்.

அவர் சொல்ல ஆரம்பித்தார்.

" சின்ன வயதில் என்னுடன் படித்த ஒருவன் இப்போது ஒரு பெரிய பதவியில் இருக்கிறான்".

சும்மா அவனைப் பார்த்து வாழ்த்துச் சொல்லிவிட்டு வரலாம் என்று சென்றேன்.

" அவன் என்னிடம் சரியாக முகம் கொடுத்து பேசவில்லை... ஏதோ ஒரு அற்பப் புழுவைப்பார்ப்பது போல் என்னைப் பார்த்தான். நான் போட்டிருக்கும் இந்த சாதாரணச் சட்டைகூட அவனுடைய கௌரவத்துக்கு இடைஞ்சல் என்பது போல் என்னிடம் பழகினான். அதுதான் மனம் ஒரு மாதிரி ஆகிவிட்டது...உன்னிடம் வந்தேன்!" என்றார்.

" கவலைப்படாதீர்கள் ... இன்றைக்கு பல பேர் அப்படித்தான் ஆகிவிடுகிறார்கள்"

" பதவி பெருக பெருக பண்பு குறைந்து விடுகிறது... இடம் உயரஉயர இதயம் குறுகிப் போய்விடுகிறது... இதயம் விசாலமானவர்களை இப்போது இதிசாசங்களில் தான் பார்க்க முடிகிறது" என்று கூறினேன்.

அவர், " என்ன அப்படி சொல்கிறீர்கள்?" என்று கேட்டார்.

" ஆமாங்க!" என்று சொல்லி அவரை உட்கார வைத்து, குசேலர் கண்ணனைப் பார்க்க போன கதை யைக் கூறினேன்.

குசேலர் கிருஷ்ணனைப் பார்ப்பதற்கு செல்கிறார். போகும் போது அவர் அவல் எடுத்து கொண்டு போகிறார்.

ஒரு பழைய துணிமூட்டையில் அதைக் கட்டி எடுத்து சென்றார்.

கிருஷ்ணன் அந்த அவல் மூட்டையை வாங்கிப் பிரிக்கிறார்.

குசேலர் அதைப் பார்க்கிறார்.

அவர் மனம் மிகவும் சங்கடப்படுகிறது.

" நான் எங்கே?கிருஷ்ணன் எங்கே? நான் ஏழை... வறியவன் ! கிருஷ்ணனோ பேரரசர்... இறைவன்!"

என்னுடைய அழுக்கான துணியை அவர் தன் கையால் தொடலாமா?- இப்படியெல்லாம் குசேலர் நினைக்கிறார்.

ஆனால் கிருஷ்ணன் அவர் பாட்டுக்கு மூட்டையை பிரித்தார். அவலை எடுத்தார்... தன் வாயில் போட்டார். அதை அசைபோட ஆரம்பித்தார்.

சிறிது நேரம் ஆயிற்று. அவல் இன்னும் கொஞ்சம் மீதி இருந்தது...கிருஷ்ணன் மூன்றாவது பிடி அவலைத் தன் வாயில் போட்டுக் கொள்ளப் போனார்.

அப்போது ருக்மிணி ஓடி வந்து கிருஷ்ணனின் கையைப் பிடித்து கொண்டதைப் பார்த்து குசேலருக்கு ஆச்சரியமாகி விட்டது.

அவர்," நாம் கொண்டு வந்த இந்த அவலை கிருஷ்ணன் சாப்பிடுவது ருக்மிணிக்கு பிடிக்கவில்லை போல் இருக் கிறது.!" என்று நினைத்தார்.

ஆனால் கிருஷ்ணனுக்கு ருக்மிணியின் இதயம் புரிந்தது. ருக்மிணிக்கும் கிருஷ்ணனின் இதயம் புரிந்தது.

" குசேலர் ருக்மிணியைப் புரிந்து கொள்ள வேண்டும்" என்பதற்காக கிருஷ்ணன் பேச ஆரம்பித்தார்.

அவர் ருக்மிணியிடம்," எதற்காக நீ என் கையைத் தடுத்து நிறுத்தினாய்...? நான் குசேலரின் சேவகன். அவர் கொண்டு வந்த அவலை நான் ஏற்றுக் கொள்ள வேண்டும்! " என்றார்.

அதற்கு ருக்மிணி சொன்ன பதில் என்ன தெரியுமா?

" நீங்கள் குசேலருக்குத் தொண்டன்! நான் உங்களுக்கு தொண்டு செய்பவள்! அந்த உரிமை காரணமாக எனக்கு இந்த அவலில் பங்கு வேண்டாமா ?எனக்குள்ள பங்கை நான் கேட்கிறேன்!?"

இதுதான் ருக்மிணியின் பதில்.

ஆன்மீக எண்ணங்கள் எல்லாம் எந்த அளவுக்கு விசா லத்தன்மை வாய்ந்தவை-என்பதை நாம் புரிந்து கொள் வதற்காகச் சான்றோர்கள் இந்த நிகழ்ச்சியை எடுத்து கூறுகிறார்கள்.

பதவி உயரும் போது பண்பும் உயர வேண்டும்! பழைய நட்புக்களை மறந்து விடக் கூடாது!.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# விபத்துக்களை கட்டுப்படுத்த புதிய ஒழுங்கு விதிகள் விரைவில் அறிமுகம்

அதிகரித்துவரும் வாகன விபத்துக்களை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் புதிய விதிமுறைகளை நடைமுறைப்படுத்தவுள்ளது. இதனடிப்படையில் 12வயதுக்குக் குறைந்த பிள்ளைகளை வாகனத்தின் முன் ஆசனத்தில் அமர்த்தி பயணத்தை மேற்கொள்வது தடை செய்யப்படவுள்ளதுடன்கண்டிப்பாகஅணைவரும் வாகன ஆசனப்பட்டியை அணிந்திருக்கவேண்டும் எனவும் ஒழுங்கு விதிகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

இந்தப் புதிய வாகன விதிகளின் அடிப்படையில் வாகனஅனுமதி பத்திரங்களுக்கு புள்ளிகள் வழங்கப்பட்டு வாகன விதிகளை மீறுவோருக்கு அதிலிருந்து புள்ளிகள் குறைக்கப்படும்.அதிகரித்து செல்லும்வாகன விபத்துக்கள் காரணமாகவே இந்த புதிய விதி அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக தெரியவருகிறது.

இந்த புள்ளி வழங்கும் திட்டத்தின் கீழ் வாகன அனுமதிப்பத்திரம் ஒன்றுக்கு 48 புள்ளிகள் உரித்தாகும். விபத்துக்களை பொறுத்து அந்த புள்ளிகள் குறைக்கப்படும். அபாயகரமான விபத்து ஒன்றை வாகன சாரதி சந்திப்பாரேயானால் 8 புள்ளிகள் குறைக்கப்படும். அதே வேளை மோசமான விபத்து ஒன்றை சந்திக்கநேரும் பட்சத்தில் 2 புள்ளிகள் குறைக்கப்படும். அத்துடன் இதற்கான தண்டப்பணம் அதிகமாக இருக்கும்.

இந்த புதிய திட்டத்தை தேசிய வீதி பாதுகாப்பு பேரவைத் தலைவர் மனோ விஜயரட்ன வரவேற்றுள்ளதுடன் மோசமான விபத்துக்கள் நாளொன்றுக்கு ஆறுவரையில் இடம்பெறுவதாக தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சிறுகதை தொகுப்பிற்கான ஆக்கங்கள் கோரல்

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்கு பிரதேச கலாசார பேரவையின் சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டுக்கான சிறுகதைகள் பிரதேச எழுத்தாளர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பிரிவினை சேர்ந்த எழுத்தாளர்களும் பிற மாவட்டங்களில் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் இப் பிரதேச செயலக பிரிவை சேர்ந்த எழுத்தாளர்களும் பங்குபற்ற முடியும்.

சிறுகதைகள் அரசியல் கலப்பற்றதாகவும் எவருடைய மனதையும் புண்படுத்தாத வகையிலும் அமைதல் வேண்டும்.

அத்துடன் சிறுகதை ஏற்கனவே பிரசுரமானதாகவோ ,வேறு சிறுகதைகளின் தழுவல்களாகவோ, மொழிபெயர்ப்பாகவோ அமைதலாகாது. ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட சிறுகதைகள் எழுதி அனுப்பலாம் . ஆனால் ஒன்று மாத்திரமே பிரசுரிக்கப்படும். இதை ஏ 4 தாளில் ஒரு பக்கத்தில் 4-7 பக்கங்களுக்குள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தெரிவுக்குழுவினிரின் தீர்ப்பே இறுதியானதாக அமைவதால் இக்குழுவினரால் தெரிவு செய்யப்படும் கதைகள் மட்டுமே பிரசுரமாகும். தெரிவு செய்யப்படாத சிறுகதைகள் மீளவும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். கதையில் திருத்தம் செய்யப்பட வேண்டுமென தெரிவுக்குழு கருதுமிடத்து தங்களது ஒத்துழைப்புடன் திருத்தம் மேற்கொள்ளப்படும்.

தங்களது ஆக்கங்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் பிரதேச செயலகர், பிரதேச கலாசார பேரவை, பிரதேச செயலகம், பருத்தித்துறை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் சிறுகதை தொகுதி வெளியீடு என குறிப்பிடல் வேண்டும். (ஸ்ரீ-2-10)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 60 |
| பச்சைமிளகாய் | 70 | 70 | 60 |
| தக்காளி | 40 | 50 | 30 |
| மரவள்ளிக் கிழங்கு | 50 | 60 | 40 |
| கோவா | 70 | 80 | 80 |
| கரட் | 60 | 70 | 60 |
| பூசணி | 25 | 30 | 25 |
| புடோல் | 35 | 40 | 35 |
| வாழைக்காய் | 30 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 180 | 140 | 150 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 80 |
| பாகற்காய் | 90 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 80 | 70 |
| பயற்றங்காய் | 150 | 180 | 100 |
| லீக்ஸ் | 50 | 60 | 50 |
| பீற்றூட் | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 60 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 170 | 200 | 150 |
| போஞ்சி | 110 | 140 | 100 |
| கத்தரிதம்புள்ள | 30 | 30 | 20 |
| கீரை - 1 பிடி | 8-10 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25-50 | 40 | 45 |

# இராசி பலன்

*05.07.2011*
*(ஆனி 20, செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு*
*சதுர்த்தி முற்பகல் 9.29 மணி வரை*
*மகம் முன்னிரவு 8.55மணிவரை*
*இராகுகாலம் 2.57-4.27மணி வரை*
*சுபநேரம் 10.27-11.57மணிவரை*
*மாணிக்கவாசகர் குருபூசை*

**மேடம்** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள்,பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்,தொழில் நன்மையுண்டு.

**இடபம்** வாகனயோகத்தால் வளம் காணும் நாள்,பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், அம்பிகை வழிபாடு ஆனந்தம் தரும், தொலைபேசிமூலம் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், குடும்பத்தில் சிலரை திருப்திப்படுத்துவதற்காக சில பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டி வரலாம்.

**கடகம்** இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், நிகழ்காலத் தேவைகளை நிறைவு செய்து கொள்வீர்கள்,வருமானம் திருப்தி தரும்,வாக்கு மேன்மையுண்டு.

**சிங்கம்** வேலவன் வழிபாட்டால் சிறப்பினை காணவேண்டிய நாள், குடும்ப பொறுப்புக்கள் கூடும், மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர் உறுதுணை புரிவர், திடீர் பயணங்கள் ஏற்படலாம்.

**கன்னி** வரம் தரும் தெய்வங்களை வழிபட வேண்டிய நாள், அலைச்சல்கள் அதிகரித்தாலும் சில ஆதாயம் கிடைக்கலாம்,பிறரை அனுசரித்து செல்வதன் மூலம் அமைதி ஏற்படலாம்.

**துலாம்** செல்வநிலை உயரும் நாள், அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்,பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் வெற்றியளிக்கும், உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் நாள்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்,விருந்தினர் வருகையுண்டு, பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடர்வீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும்.

**தனுசு** புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்,தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்,வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கைகள் எடுப்பீர்கள்,மருத்துவ செலவுகள் குறைவடையும்.

**மகரம்** கந்தன் வழிபாட்டால் கவலைகள் தீர வேண்டிய நாள், உடல்ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்,தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், குடும்பத்தினருக்காக பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடிவரும்.

**மீனம்** எடுத்த கருமங்களை எளிதில் நிறைவேற்றுவீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பகைவர்கள் மனம் மாறுவர், தொழில் முன்னேற்றம் உண்டு.

வளவன்





யாழ்.தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் பெற்றோர் தின விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் மற்றும் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் அதிபர், ஆசிரியர்கள் அமர்ந்திருப்பதையும் வித்தியாலய மாணவிகளின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மல்லாவி செய்தியாளர்)

# பிரதேச இலக்கியப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட பிரதேச இலக்கிய போட்டி முடிவுகள் பிரதேச செயலாளரினால் அறிவிக்கப் பட்டுள்ளது.இதில் முதல் மூன்று இடங்க ளைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**கட்டுரை கனிஷ்ட பிரிவு**

நா.ஜதுர்ஷா (யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை), வி.நிருபன் (யா/புற்றளை மகா வித்தியாலயம்), ந.நந்தபாலன் (யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்)

**சிரேஷ்ட பிரிவு**

வா.ஜெயபிரசன்னா (யா/ஹாட்லிக் கல்லூரி), ப.தாட்ஷாயினி (யா/புற்றளை மகா வித்தியாலயம்), ம.நிர்த்திகா (யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம்)

**கட்டுரை (ஆங்கிலம்)**

**கனிஷ்ட பிரிவு**

முதலாமிடம் க.ஹரிகரசர்மா (யா/ஹாட்லிக் கல்லூரி)

**சிரேஷ்ட பிரிவு**

முதலாமிடம் பு.வைகுந்தன் (யா/ஹாட்லிக் கல்லூரி)

**கவிதை கனிஷ்ட பிரிவு**

கி.சுவஸ்திகா (யா/புலோலி மெ.மி.த.க.பா), அ.அனுஷா(யா/புலோலி மெ.மி.த.க.பா), **மூன்றாமிடம் இருவர்** (இ.பிரசன்னா (யா/ஹாட்லிக் கல்லூரி),ஜெ.ஜெயமதுஷா (யா/புலோலி மெ.மி.த.க.பா)

**சிரேஷ்ட பிரிவு**

வா.வைதேகி (யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி),ர.றேணுகர (யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), இ.பிரியங்கா (யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம்)

**சிறுகதை கனிஷ்ட பிரிவு**

ஜெ.ஜெயசாந்தா (யா/புலோலி மெ.மி. த.க.பா),ஜெ.கிருஜா (யா/புலோலி மெ.மி. த.க.பா)

**கவிதைகள் பாடும் போட்டி**

**கனிஷ்ட பிரிவு**

முதலாமிடம் இ.சத்தியா (யா/புலோலி மெ.மி.த.க.பா)

**கையெழுத்துப் போட்டி**

**கனிஷ்ட பிரிவு**

இ.சுவஸ்திகா (யா/புலோலி மெ.மி.த.க.பா), சி.சிவதர்சினி (யா/புலோலி மெ.மி.த.க.பா), **மூன்றாமிடம் இருவர்** ஜெ.கிருஜா (யா/புலோலி மெ.மி.த.க.பா),ச.துஷியா (யா/புலோலி மெ.மி.த.க.பா)

**கவிதை (ஆங்கிலம்) கனிஷ்ட பிரிவு**

முதலாமிடம் சு.துவாரகன்(யா/புற்றளை மகா வித்தியால்யம்)

**திறந்த போட்டிகள்**

**பாடலாக்கப்போட்டி**

பா.வேதநாயகம் (தும்பளை தெற்கு), மு.தணிகாசலம் (கற்கோவளம்), பா.மதனரூபி (அல்வாய் வடக்கு)

**நாட்டார் கலை கற்றல்போட்டி**

மு.தணிகாசலம் (கற்கோவளம்), பா.வேதநாயகம் (தும்பளை தெற்கு)

**பாடல் (ஆங்கிலம்)**

முதலாமிடம்(வைகுந்தரேசன் (புலோலிவடக்கு)

**சிறுகதை**

பொ.மகாதேவா (தும்பளை), இ. சச்சிதானந்தம் (தும்பளை),**மூன்றாமிடம் இருவர்** திருமதி தே.ஆனந்தக்கிளி (தும்பளை தெற்கு), திருமதித.லோகநாயகி (1ஆம் கட்டை ஒழுங்கை, பருத்தித்துறை)

**கவிதை**

சி.சிவனேசன் (அல்வாய் வடமேற்கு), இ.திருத்துவராஜா (அல்வாய் வட்மேற்கு) (ஸ்ரீ)

## ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ்

## பயண கட்டணங்கள் குறைப்பு

(கொழும்பு)

கொழும்பிலிருந்து பல பாகங்களுக்கு செல்லும் விமான சேவைக் கட்டணங்களில் போட்டித் தன்மையுடன் கூடிய நெகிழ்வான குறைப்பினை ஏற்படுத்தியுள்ளதாக ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் அறிவித்துள்ளது.

இதன்படி மாணவர்கள் விசாவில் லண்டன், கோலாலம்பூர் மற்றும் பெங்களூருக்கு ஒருவழிப் பாதை விமானச்சீட்டுக்கு விசேட கட்டணமும் மத்திய கிழக்கு நாடுகளான டோகா, டுபாய் மற்றும் சவுதி அரேபிய நாடுகளுக்கு பணிக்காக செல்பவர்களுக்கு விசேட கட்டணமும் யாத்திரிகர்களாக இந்தியா, ஜித்தா மற்றும் தாய்லாந்துக்கு செல்பவர்களுக்கு விசேட கட்டணமும் அறவிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இவர்களுக்கு 15 தொடக்கம் 20 சதவீதம் வரை கழிவு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு**

## வெளிவாரிப் பரீட்சைகள்-2010

1. வணிக முதற் தேர்வு -2010 (புதிய பாடத்திட்டம்)
2. வணிக இரண்டாம் தேர்வு -2010 (புதிய பாடத்திட்டம்)
3. வணிக மூன்றாம் தேர்வு -2010 (புதிய பாடத்திட்டம்)
4. வணிக முதற் தேர்வு - 2010 (பழைய பாடத்திட்டம்)
5. வணிக மாணி -பகுதி-I-2010 (பழைய பாடத்திட்டம்)
6. வணிக மாணி -பகுதி-II-2009 & 2010 (பழைய பாடத்திட்டம்)
7. வணிக மாணி -பகுதி-III- 2009 (பழைய பாடத்திட்டம்)

மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப் பரீட்சைக்கு தோற்றும் தகுதியான பரீட்சார்த்திகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா.100/- இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 100/- க்கான காசுக் கட்டளை/ தபாற் கட்டளையுடன் சுய முகவரியிடப்பட்ட ரூபா 20/- பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 x 20 செ.மீ அளவுடைய தபால் உறையை இணைத்து, **உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி **19.08.2011 (வெள்ளிக்கிழமை)** ஆகும்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

முக்கிய குறிப்பு:- மீள்பரீட்சார்த்திகள் உரிய பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்த பின்னர் விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்

04.07.2011 (சி-3649)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## திருமதி நித்தியானந்தம் விமலாதேவி

**மண்ணில்**
**03.10.1952**

**விண்ணில்**
**23.05.2011**



உன் விழிகளில் தூசு விழுந்தாலும்
துடைப்பதற்கு ஒரு மகன் கூட
பக்கத்தில் இல்லையென நினைத்தோ
பாதி வாழ்க்கை முடித்து மீதி வாழ்க்கை காணாது
நீ எம்மையெல்லாம் பரிதவிக்க விட்டுச் சென்றாயோ
வாடுகிறோம் உன் பிரிவால்
நீ பிரியவில்லை என்றும் எம்மில்
வாழ்ந்து கொண்டிருக்கிறாய்

எமது குடும்பத் தலைவியின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு, உடன் வந்து உதவியவர்களுக்கும், நேரிலும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் வார்த்தைகள் கூறியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை 06.07.2011 புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விலும் அன்று நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்போடு வேண்டுகிறோம்.

குறிப்பு:- இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று சமுகமளிக்குமாறு வேண்டி நிற்கின்றோம்.

(5484)

**வத்திராயன் வடக்கு,**
**தாளையடி.**

**கணவர் மற்றும்**
**குடும்பத்தினர்.**

# வாகன விபத்தில் பாடசாலை மாணவிகள் இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பு- காலி பிரதான வீதியின் பலபிட்டிய- வெள்ளவத்தை பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு பாடசாலை மாணவிகள் உயிரிழந்துள்ளனர். இந்த சம்பவம் கடந்த 2 ஆம் திகதி இடம் பெற்றுள்ளது.

பாடசாலை சீருடையை தைக்கக் கொடுத்து அதனை பெற்று மீண்டும் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது இந்த மாணவிகள் விபத்தில் சிக்கியுள்ளனர். 17 மற்றும் 18 வயதான மாணவிகளே விபத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பிய பெண்ணொருவரை தெனியாய பிரதேசத்தில் ஏற்றிச் சென்ற வாகனம் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாக அம்பலாங்கொட பொலிஸார் கூறியுள்ளனர். சம்பவத்தில் வாகனத்தில் இருந்த 9 பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-4)

# தெரிவுக்குழுவில் கலந்து கொள்வது குறித்து வியாழனன்று தீர்மானம்

## ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு



(கொழும்பு)

இன்ப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு யோசனையை முன் வைக்கும் நோக்கில் அரசாங்கம் அமைக்க உள்ள தெரிவுக்குழு காலத்தை வீணடிக்கும் அரசாங்கத்தின் ஏமாற்று நடவடிக்கை என்பதால் அதில் கலந்து கொள்வதா இல்லையா என்பது குறித்து நாளை மறுதினம் வியாழக்கிழமைக்குப் பின்னர் தீர் மானிக்கப்படும் என ஐக்கிய தேசி யக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்துள்ளார்.


கட்சியின் தலைவரான ரணில் விக்ரமசிங்க, அமெரிக்காவின் வோஷிங்டன் நகரில் நடைபெறும் சர்வதேச ஜனநாயக சங்கத்தின் மாநாட்டில் கலந்து கொண்டுள்ளதால் அவர் நாடு திரும்பிய பின்னர் இது குறித்த இறுதி தீர்மானம் எடுக்கப்படும்.

தெரிவுக்குழுவை அமைக்க உள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியான போதும் அரசாங்கம் அது தொடர்பாக இதுவரை எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. தெரிவுக் குழுவை அமைத்து காலம் கடத்தாமல் உடனடியான தீர்வை அரசாங்கம் முன்வைக்க வேண்டும்.

தற்போதைய அரசாங்கம் பதவியேற்றத்துடன் அரசியல் தீர்வை காண்பதற்காக சர்வகட்சி பிரதி நிதிகள் குழுவை நியமித்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்த போதிலும் அந்த குழுவின் அறிக்கையை இது வரை வெளியிடவில்லை.

அத்துடன் தீர்வு யோசனைகள் எதனையும் முன் வைக்க வில்லை எனவும் அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-4)


நாகரீகம் பற்றி மட்டுமல்ல...




எமக்கு நாணயம் பற்றியும் தெரியும் !

(சி-3646)

இதை உங்களுக்குத் தெரிவிப்பது இலங்கை மத்திய வங்கி


# மணிபல்லவத்தில் மஹோற்சவம்



# நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

## இன்று நான்காம் திருவிழா

### நயினை நாகபூசணியே போற்றி

அண்டபிண்டங்கள் யாவும் உணர்ந்த மெய்யறி வினைத்
தொண்டு செய்யடியார்க்கு அருளும்
நயினை நாகபூசணியே போற்றி
ஆதி குண்டலியாய் சக்தியின் வடிவினைத் தாயாக ஓதி
எழுதி வழிபடத் தவம் யாதோ
நயினை நாகபூசணியே போற்றி

*டாக்டர் சி. யமுனாநந்தா*

### கருணைக் கடல் நடுவே

கருணைக் கடல் நடுவே கனிந்திருந்து காப்பவளே
பொறுமையின் தாயே பூமாதேவி ஆனவளே
வறுமை, நோய், பஞ்சத்தில் வாடிடும் மக்களெல்லாம்
பொறுமையுடன் உன்பாதம் போற்றியே தொழுதேத்தி
விடிவொன்று வருமென்று விரக்தியால் வாடுகின்றார்
அவர் துன்பம் தனைப் போக்க ஆடி வந்து தேரதனில்
அருளை அள்ளி வீசுமம்மா கருணையை காட்டுமம்மா

*ந. சக்திவேல்*
*அச்சுவேலி வடக்கு*

### குறை தீர்ப்பாய் நாயகியே!

நயினையிலே வீற்றிருக்கும் எங்கள்
உள்ளத்து நாயகியே!
ஈழத்தமிழினத்தின் தீராத இன்னல்களை
இந்நாளில் தீர்த்தருள்வாய் உத்தமியே!
அழுதழுது களைத்து விட்டோம்
எமக்கு காவலுக்கு யாருளரோ!
கண்திறந்து பாரம்மா எம்
கவலைகளை தீர்த்திடம்மா

*மு. அருமைச்சந்திரன்*

### சர்வலோகமாளும் நாகபூசணித்தாயே சரணம்! சரணம்!!

நயினையைப் பதியாய் கொண்ட உலகநாயகியே-சரணம்
நாகம் பூசித்து நல்லருள் பெற்ற நாகம்மாளே-சரணம்
நரகாசுரனை அழித்திட்ட வீரசக்தியே-சரணம்
தேவர்களைக் காத்திட்ட மகேஸ்வரியே-சரணம்
சிவனில் இடப்பாகம் பெற்ற அர்த்த நாரீஸ்வரியே-சரணம்
பக்தர்களைக் காக்கும் பராசக்தியே-சரணம்
சம்பந்தனுக்கு ஞானப்பாலூட்டிய உமையே-சரணம்
சர்வலோக மாளும் நாகபூசணித் தாயே- சரணம்! சரணம்!!

*சொ. தர்மகுலசிங்கம்*
*நாயன்மார்கட்டு*


கணேசன் ஸ்ரோர்ஸ்

201, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-3643)

# தெய்வீக தொடர் இசைப் பேருரை

(யாழ்ப்பாணம்)

தொல்புரம்-வழக்கம்பரை ஸ்ரீமகாமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இக்காலங்களில் தினமும் மாலை 6 மணிக்கு நல்லைக்குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சி.வை. நித்தியானந்த சர்மா மகாபாரதம் பற்றி தெய்வீகத் தொடர் இசைப்பேரரை நிகழ்த்துவார் என ஆலயபரிபாலனசபை அறிவித்துள்ளது. (ஸ்ரீ - 4)

# ஆலோசனைக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியின் மூத்த தமிழாசிரியரும் தேசிய கல்வியற்கல்லூரி விரிவுரையாளருமாகிய க.தர்மராசாவின் மணிவிழா நிகழ்வு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வை ஏற்பாடு செய்து நடத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாளை புதன்கிழமை மாலை 4 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

மேற்படி கூட்டத்திற்கு ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

(ஸ்ரீ-2)

# 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பவளவிழா மலர் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)


தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முதலாவது காங்கேசன்துறை சாரணர் துருப்பினரின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பவளவிழா மலர் வெளியீடும் இன்று காலை 9 மணிக்கு பாவலர் துரையப்பாப்பிள்ளை மண்டபத்தில் அதிபர் திருமதி.சிவமலர் அனந்தசயனன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானை பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி தம்பிராஜா பிரகாசன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ந.கனகரத்தினம், கௌரவ விருந்தினராக வட மாகாணசாரண ஆணையாளர் நா.போஜன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பவள விழா மலர் வெளியீட்டுரையை மாவட்ட சாரண ஆணையாளர் ந.இரவீந்திரனும், நூல் ஆய்வுரையை யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் நாகதமிழிந்திரனும் நிகழ்த்துவார்கள்.

முதற் பிரதியை மகா சில்க்ஸ் புடைவையக உரிமையாளரும்மகாஜனனுமான து. குணநேசன் பெற்றுக் கொள்வார். (ஸ்ரீ-2)

# தேசிய மட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டிய வீராங்கனைகள் கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் தேசிய மட்ட கூடைப்பந்தாட்ட போட்டியில் வெற்றியீட்டியோருக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று யாழ். நாவலர் மணி மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் 37 ஆவது தேசிய மட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் 3 ஆம் இடத்தைப் பெற்ற யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட பெண்கள் அணியினர் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பாரம் பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுகையில், யுத்தத்திற்கு முன்பு கல்வித்துறையிலும், விளையாட்டுத் துறையிலும் இன்னும் பல துறைகளிலும் யாழ். மாவட்டம் முன்னிலை பெற்று திகழ்ந்துள்ளது.

30 வருட யுத்தம் இவ்வாறான துறைகளை வளர்ச்சியடைய விடாது தடுத்துள்ளது.

இந்த போட்டியில் பங்கு பற்றியவர்களுக்கு எமது கட்சி நிதியிலிருந்து ஒவ்வொருவருக்கும் தலா 2 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது.

முடிந்தளவுக்கு என்னாலான ஊக்குவிப்புக்களை வழங்கத் தயாராகவுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, வடமாகாண விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை, யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி எப்.ஜே. ரூபசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-6)

# எச்.என். பியின் கைதடிக்கிளை நேற்று திறந்து வைப்பு

(சாவகச்சேரி)

ஹற்றன் நசனல் வங்கியின் கைதடிக் கிளை நேற்று நண்பகல் 12 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஹற்றன் நசனல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான இ.தியாகராசா மங்கள விளக்கேற்றி வங்கிநடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தார்.

நாட்டின் 213 ஆவது கிளையான இக் கிளையின் ஆரம்ப நிகழ்வில் சாந்தி வீடமைப் புக்கடன், பொற்கடன், விவசாய மேம்பாட்டுக் கடன் ஆகிய திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

எச்.என்.பியின் சமூகநல் திட்டங்களின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்களும் பாடசாலை நூலகங்களுக்கான புத்தக்கங்ளையும் மாணவர்களிடமும் அதிபர்களிடமும் முகாமைத்துவப் பணிப்பாளர் கையளித்தார்.

அத்துடன் கைதடி நவீல்ட் பாடசாலை மாணவர்களின் உபயோகத்திற்கென உணவுகளை பாதுகாக்க ஒரு அதிகுளிரூட்டியையும் இரண்டு சலவை இயந்திரங்களையும் அதிபரிடம் கையளித்தார்.

மேலும் கைதடி வயோதிபர் இல்லத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அவரின் பாவனைக்கென சக்கரநாற்காலி ஒன்றையும் வழங்கி வைத்தார். (ஸ்ரீ-29)

# கந்தர்மடம் ஞானவைரவர் ஆலயத்தில் பிள்ளையார் விக்கிரகம் களவாடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் பழம் வீதியில் அமைந்துள்ள அருள்மிகு ஞானவைரவர் சுவாமி தேவஸ்தானத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்த பிள்ளையார் விக்கிரகம் அடியோடு அகழ்ந்தெடுக்கப்பட்டு களவாடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் இவ்விக்கிரகமானது கடந்த ஏப்ரல் மாதம் பிரதிஸ்டை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2-8)

# மாணிக்கவாசகர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பருத்திக் கலட்டி அருள் மிகு ஞான வைரவர் தேவஸ்தானத்தில் மாணிக்கவாசகர் குருபூசை இன்று செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது.

இதில் இன்று தொடக்கம் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை வாதவூரர் வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதில் சிறப்புரை, சிறப்பு நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெறும்.

ஆரம்பநாளான இன்று காலைப் பூசை, திருமுறை பாராயணமும் பகல் விசேட பூசையும், மாலை விசேட பூசைகளும் இடம்பெறும். அத்தோடு தினமும் சைவப்பெரியார்களின் சிறப்புரையும் இடம்பெறும். (ஸ்ரீ-2)




# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் திருவருள்மிகு மூத்த விநாயகர் தேவஸ்தான மஹோற்சவம் கடந்த 28 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதில் இன்று மாலை 6 மணிக்கு சப்பறத்திருவிழாவும் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ)

*****

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மண்டுவில் சோலை அம்மன் ஆலய மஹோற்சவ விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இவ்வுற்சவத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெற்று மறுநாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

(ஸ்ரீ-29)

*****

(யாழ்ப்பாணம்)

சுதுமலை வடக்கு அருள்மிகு ஸ்ரீ சாமுண்டாம்பிகா சமேத ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான அலங்கார உற்சவம் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை மாலை சப்பறத்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

அத்தோடு 20 ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை முதல் பொங்கல் வழிபாடும் நடைபெறும். (ஸ்ரீ)








பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் கோப்பாய், நீர்வேலி பிரதேசங்களில் உப்பு நீர் வெள்ளத் தடுப்பணை புனரமைத்தல் செயற்பாட்டு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட பொது மக்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

## நவோதயா வாரநிகழ்வு

(மருதங்கேணி)

முல்லைத்தீவு பாலிநகர் மகா வித்தியாலயத்தில் நவோதயா வாரம் கடந்த முதலாம் திகதி தொடக்கம் நாளை மறுதினம் வியாழக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இதில் 5 ஆம் நாள் நிகழ்வு சுற்றாடல் சுசுகாதார போசாக்கு தினமாக கடைப்பிடிக்கப்படவுள்ளது.

நாளை புதன்கிழமை 6 ஆம் நாள் நிகழ்வில் விஞ்ஞான தொழில்நுட்ப கண்காட்சியும் இறுதிநாள் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கல் மற்றும் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது.

இவ்விழா பாடசாலை மாணவர்களின் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் எல்லோரது பங்களிப்புடனேயே இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2-35)

## மாணிக்க வாசகர் குருபூசை

சுழிபுரம் வழக்கம்பரை சிவபூமி முதியோர் இல்லத்தில் இன்று மாலை 3.30 மணிக்கு செஞ்சொற் செல்வன் ஆறுதிருமுகன் தலைமையில் மாணிக்கவாசகர் குருபூசை நடைபெறவுள்ளது.

இதில் யா/மூளாய் சைவப் பிரகாச மகா வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வும் இடம் பெறஉள்ளது. (ஸ்ரீ)

# உள்ளூராட்சி தேர்தலில் வெற்றி எமக்கே; சவால் விடுக்கும் அரசியல் கட்சிகள்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் வெற்றியும் தமக்கே கிடைக்கும் என ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த தேர்தலில் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் கிராம மட்டத்தில் பிரசார நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாக கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரி வித்துள்ளார்.

பிரசார கூட்டங்களில் அந்தந்த மாவட்டத்திலுள்ள சிரேஷ்ட அரசியல் தலைவர்களை பங்கேற்கச் செய்வதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.


65 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெறவுள்ளதாகவும் இதில் அநேக மன்றங்களின் அதிகாரம் ஐ.ம.சு.கூ.வசமாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் இம்முறை தேர்தலில் அரசாங்கத்திற்கு பாரிய சவாலை விடுக்க முடியும் என எதிர்பார்ப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளார்.

இதற்காக கிராம மட்டத்தில் மக்களை தெளிவுபடுத்தும் வகையில் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அத்தநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

இதுவொரு தீர்மானமிக்க தேர்தலாக அமையாத போதிலும் இதில் வெற்றியீட்டுவதன் மூலம் அரசாங்கத்திற்கு சவாலை விடுக்க முடியுமென அவர் மேலும் கூறினார்.





இந்நிலையில் அரசாங்கத்தின் தான்தோன்றித் தனமான நிர்வாகத்திற்கு எதிராக இம்முறை தேர்தலின் போது மக்களை அணி திரட்டப் போவதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதற்காக கிராம மட்டத்தில் மக்களை தெளிவுபடுத்தும் வகையில் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். ஊழல்கள் அற்ற வெளிப்படை தன்மையுடன் கூடிய உள்ளூராட்சி மன்ற நிர்வாகமொன்றினை ஏற் படுத்துவதே மக்கள் விடுதலை முன்னணியின் நோக்கம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-4)

# வடபகுதி மக்கள் நிம்மதியாக வாழும் வகையில் அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும்

(கொழும்பு)

## மல்வத்து பீடாதிபதி வலியுறுத்து

வடக்கில் வாழும் மக்கள் நிம்மதியாக வாழும் வகையில் அவர்கள் மீது விசேட கவனம் செலுத்தி அரசியல் தீர்வு ஒன்றை வழங்க வேண்டும். அரசு எமது அறிவுரைகளை உதாசீனம் செய்தால் பழைய நிலைமை மீண்டும் ஏற்படலாம் என மல்வத்து பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணி அரசியல் பிரிவு தலைவர் வே.இராதாகிருஷ்ணன் உட்பட மலையக மக்கள் முன்னணி தூதுக்குழுவினர் சமீபத்தில் அஸ்கிரிய மல்வத்து பீடாதிபதிகளைச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

இதன் போதே மல்வத்து பீடாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களை இன்று இழுத்து மூடும் நிலைமையே உருவாகியுள்ளது.

நாட்டின் பல்கலைக்கழகங்களை பேணிப்பாதுகாக்கத் திராணியற்றவர்கள் இன்று கட்டணம் செலுத்தி அங்கு வெளிநாட்டு மாணவர்களை ப்யில்வதற்கு வாய்ப்புக்களை உருவாக்க முனைந்துள்ளனர்.

மலையக மக்களின் பிரச்சினைகள் குறித்தும் நான் நன்கறிவேன் . அவர்களுக்காக நானும் தலையிட்டு செயற்பட்டுள்ளேன். ஹந்தானைப் பிரதேசத்தில் அவர்களுக்கு தோட்ட வீடுகளை கட்டிக் கொடுக்க நான் உதவியுள்ளேன்.

வடக்கை பொறுத்தவரை அந்த மக்களின் பிரச்சினைகள் இன்னமும் தீர்த்து வைக்கப்படவில்லை.

எனக்கும் வடபகுதிக்கு செல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. நான் அவர்களது பிரச்சினைகள் பற்றி அறிந்துள்ளேன்.

வடக்கின் பிரச்சினைகள் பற்றி நான் தொடர்ச்சியாக அரசுக்கு அறிவுறுத்தி வருகிறேன். எமது கருத்துக்கள் எதையும் அரசதரப்பினர் கேட்பதாக இல்லை.

வடக்கு மக்கள் மீது விசேட அக்கறை செலுத்தி அந்த மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குமாறு நாம் ஜனாதிபதியிடமும் வலியுறுத்தியுள்ளோம்.

அவ்வாறு செயற்படாமல் விட்டால் எதிர்காலத்தில் மேலும் பிரச்சினைகள் உருவாக இடமுள்ளது.

வடக்கில் முன்னைய சூழல் மீண்டும் உருவாகும் என்றார். (ஸ்ரீ-4)


மரத்தையே அறிந்தவனுக்கு அதன் இலையைக் காட்டுவதா...




அறிவுடையார் எல்லாம் உடையார்
அறியாதார்க்கு இழப்பே மிஞ்சும் !

இதை உங்களுக்குத் தெரிவிப்பது இலங்கை மத்திய வங்கி


# தகவல் பெறும் உரிமை தொடர்பான பிரேரணை தொடரும்- ஐ.தே.க

(கொழும்பு)

தகவல் பெறும் உரிமை தொடர்பான பிரேரணையை தொடர்ந்தும் கோரப் போவதாக ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித்தலைவரும் தற்போதைய பதில் தலைவருமான கருஜயசூரிய தெரிவித்துள்ளார். அவரினால் கடந்த மாதம் சமர்ப்பிக்கப்பட்ட இரு பிரேரணைகள் நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டன.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சகல பிரஜைகளுக்கும் பேச்சுரிமை இருப்பதன் காரணமாக தகவல் அறியும் உரிமை யும் உண்டு.

சகலரும் தகவல் அறியும் உரிமை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் என்ற கோதாவிலும் சட்டத்தை பேணுபவர் என்ற வகையிலும் மக்களுக்கு இது குறித்த புரிந்துணர்வை மேற்கொள்ளவுள்ளேன்.



அடுத்த முறை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் இந்த பிரேரணையை மேலும் வலுப்படுத் துவது குறித்து ஏனைய எதிர்க் கட்சி களின் ஒத்துழைப்பை பெற முயற்சிக்கப்படும் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-4)

## வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள நீதிமன்றங்களில் (2)

# அரச கரும மொழியான தமிழ்மொழி கையாளப்படுவதை அரசியலமைப்பில் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது

1978 ஆம் ஆண்டின் குடியரசு அரசியலமைப்பு தமிழ்மொழி உரிமைகளுக்கு அத்தியாயம் நாலு மூலம் அரசியலமைப்பு அந்தஸ்து வழங்கியது. அரசியலமைப்பு உறுப்புரை 19, சிங்களத்தையும் தமிழையும் ''தேசிய மொழிகள்'' என்ற அந்தஸ்துக்கு உயர்த்திய போதும், உறுப்புரை 18 சிங்களத்தை அரச கரும மொழியாக ஏற்கனவே இருந்த நிலையைப் பேணி, பிரகடனப்படுத்தியது. உறுப்புரை 22, இலங்கை முழுவதும் அரச கரும மொழி நிர்வாக மொழியாக இருக்க வேண்டும் என்றும், ஆயினும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிலுள்ள பொது நிறுவனங்களில் பொதுப் பதிவேடுகள் பேணப்படுவதற்கும் சகல பரிமாறல்களுக்கும் தமிழ் மொழி நிர்வாக மொழியாக உபயோகிக்கப்பட வேண்டும் என்றும் தேவைப்படுத்தப்பட்டது.

முக்கியமாக உறுப்புரை 24 இலங்கை முழுவதும் அரச கரும மொழியான சிங்களம் நீதிமன்ற மொழியாக இருக்க வேண்டும் என்றும் ஆயினும் வட கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள முதனிலை நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் நீதிமன்றங்களில் தமிழ் மொழி நீதிமன்ற மொழியாக இருக்க வேண்டும் என்பதுடன் பதிவேடுகள் பேணப்படுவதும் நடவடிக்கை முறைகளும் தமிழ் மொழியிலேயே இருக்க வேண்டும் என்றும் தேவைப்படுத்தியது. உறுப்புரை 25, அரசியலமைப்பின் நாலாம் அத்தியாயத்தில் வழங்கப்பட்டிருக்கும் மொழிப் பாவிப்புக்கு வேண்டிய போதிய வசதிகளை அரசு வழங்க வேண்டும் என தேவைப்படுத்தியுள்ளது.

1987 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கு கொண்டு வரப்பட்ட 13 ஆவது திருத்தத்தின் மூலம் உறுப்புரை 18 (2) தமிழ்மொழியும் அரச கரும மொழியாகப் பிரகடனப்படுத்தியதுடன், 18 (4) மொழி உரிமைகளை உள்ளடக்கிய அரசியலமைப்பு அத்தியாயம் நாலின் ஏற்பாடுகளை அமுல்படுத்த நியதிச் சட்டத்தின் மூலம் பாராளுமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தேவைப்படுத்தியுள்ளது.

1988 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கு கொண்டு வரப்பட்ட 16 ஆவது திருத்தத்தின் மூலம் உறுப்புரை 22 (1), " இலங்கை முழுவதும் சிங்களமும் தமிழும் நிர்வாக மொழியாகும் என்பதுடன் இலங்கை முழுவதிலும் வடகிழக்கு தவிர்ந்த எல்லா மாகாணங்களிலும் உள்ள பொது நிறுவனங்களில் பதிவேடுகளை பேணுதலும் சகல தொடர்பு பரிமாற்றங்களுக்கும் நிர்வாக மொழியாக சிங்களம் உபயோகிக்கப்பட வேண்டும் என்பதுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் உபயோகிக்கப்பட வேண்டும்" என பிரகடனப்படுத்தப்பட்டது.

பிரதானமாக குறித்த 16 ஆவது திருத்தத்தின் மூலம் உறுப்புரை 24 (1), " இலங்கை முழுவதும் சிங்களமும் தமிழும் நீதிமன்ற மொழியாகும் என்பதுடன், இலங்கை முழுவதிலும் வடக்கு, கிழக்கு தவிர்ந்த எல்லா மாகாணங்களிலும் சிங்களமே நீதிமன்ற மொழியாக உபயோகிக்கப்பட வேண்டும் என்பதுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியே உப யோகிக்கப்பட வேண்டும் என்றும், பதிவேடுகளும், நடவடிக்கை முறைகளும் அந்த நீதிமன்ற மொழியிலேயே இருக்க வேண்டும்" என்றும் பிரகடனப்படுத்தப்பட்டது.

குறித்த உறுப்புரை 24 (1) புறவிதியின் படி, ''அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் நீதியமைச்சர் எந்தவொரு நீதிமன்றத்திலும் பதிவேடுகள் பேணப்படவும், நடவடிக்கை முறைகளுக்கும் அந்த நீதிமன்ற மொழியிலும் இருக்க வேண்டும்'' என அறிவுறுத்தலாம் என பகருகின்றது. அதாவது, குறித்த புறவிதியின் படி அந்த நீதிமன்ற மொழியல்லாத மொழியிலும் என்பது சம்பந்தப்பட்ட நீதிமன்ற மொழித் தேவைப்பாட்டுக்கு மேலதிகமாகவே அல்லாது சம்பந்தப்பட்ட நீதிமன்ற மொழிக்கு பதிலாக என வியாக்கியானப்பட முடியாது.

ஏனெனில், உறுப்புரை 25எ, மொழி உரிமைகளை உள்ளடக்கிய அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் ஏதாவது ஒரு சட்ட ஏற்பாடுகளுக்கும் இடையே முரண்பாடு தோன்றினால், இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளே மேலோங்கும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆகவே, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள நீதிமன்றங்களின் மொழி தமிழ்மொழியே என்பதும் தேவையேற்படின் தமிழ் மொழியுடன் சிங்களமொழி அல்லது ஆங்கில மொழி உபயோகிக்கப்படலாம் என்பதும் வெள்ளிடைமலை.

சட்டமா அதிபர் சார்பில் வாதுரை செய்த அரச சட்டத்தரணி, நீதி அமைச்சராக கே. டபிள்யூ. தேவநாயகம் அவர்களால் நீதிமன்றத்தில் ஆங்கில மொழிப் பிரயோகம் சம்பந்தமாக பிரகடனப்படுத்தி வர்த்தமானியையும் அது தொடர்பில் தீர்க்கப்பட்ட வழக்கு தொடர்பிலும் உயர் நீதிமன்றத்தின் கவனத்திற்கு சமர்ப்பித்தார்.

பிரதிவாதிகள் சார்பில் அரச சட்டத்தரணியின் வாதுரைக்கு பதிலளித்த விக்னராசா அவர்கள் குறித்த வர்த்தமானியில் பிரகடனமும் நீதிமன்றத் தீர்ப்பும் அரசியலமைப்பின் 16 ஆவது திருத்தம் நடைமுறைக்கு வந்த 1988 ஆம் ஆண்டுக்கு முற்பட்டதென்றும் ஆகவே அவை தற்போது சட்ட வலுவற்றது என்றும் நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கா (தற்போதைய பிரதம நீதியரசர்), மத்தும பண்டார, எதிர் கமநல சேவைகள் உதவி ஆணையாளரும் ஏனையோரும் (2003) 2 இலங்கை சட்ட அறிக்கை பக்கம் 80 என்ற வழக்கில் "சட்டத்தில் வெவ்வேறு பொருள் கொடுக்கக் கூடிய சூழ்நிலை தோன்றும் போது குறித்த சட்டத்தின் நோக்கத்திற்கு ஏற்ப வியாக்கியானம் செய்யப்பட வேண்டுமென்றும் பாதிக்கப்பட்ட கட்சிக்காரருக்கு கொழும்பிலுள்ள மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு பதிலாக மாகாண மேல் நீதிமன்றத்திலேயே நிவாரணத்தைக் கோரும் உரிமையை வழங்குவதே அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் நோக்கமாகும்.

(தொடரும்)

# தபால்மா அதிபருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை

தபால்மா அதிபர் நாயகத்திற்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினரை கொண்ட குழு எதிர்வரும் மூன்று வாரங்களுக்குள் தமது அறிக்கையை தபால் சேவைகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவிடம் கையளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.தபால் திணைக்களத்தின் தபால்மா அதிபர் நாயகம் ஊழல் மற்றும் மோசடியில் ஈடுபடுவதாக கூறி அவரை பதவி நீக்குமாறு தொழிற்சங்கங்கள் மற்றும் தபால் திணைக்கள ஊழியர்கள் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.விசாரணை முடியும் வரை அவரது அனைத்து அதிகாரங்களும் அமைச்சர் ஜீவன்குமா ரதுங்கவால் பறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தபால் சேவைகள் அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ தலைமையிலான குறித்த விசாரணைக்குழு தற்போது குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)



பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினத்தின் ஓர் ஆண்டு சேவையைப் பாராட்டி கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் சபையின் தலைமை அலுவலக மகாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் மற்றும் நலன்புரிச் சங்கத்தினரால் விருது வழங்கி கௌரவிக்கப்படுவதை படத்தில் காணலாம்.

# சனல் 4 விவரணம் தொடர்பாக தொழில்நுட்ப ரீதியாக ஆய்வு

## பிரித்தானிய ஒப்கோம் அலுவலகம் நடவடிக்கை

சனல் 4 தொலைக்காட்சி இலங்கை சம்பந்தமாக ஒளிப்பரப்பிய விவரணப்படம் தொடர்பாக தொழில்நுட்ப ரீதியாக ஆய்வுகளை மேற்கொள்ள பிரித்தானிய அரசு தொடர்பாடல் அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சனல் 4 தொலைக்காட்சி ஒளிப்பரப்பிய வீடியோ காட்சிகள் போலியாக தயாரிக்கப்பட்டவை என இலங்கை அரசாங்க தரப்பினரால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதன் காரணமாக ஒப்கோம் என்ற பிரித்தானிய தொடர்பாடல் அலுவலகம் இந்த விசாரணையை நடத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தூதரகத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த விவரணப்படம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் மாத்திரமல்லாது பிரித்தானியாவில் உள்ள சிங்கள அமைப்புக்கள் பல அலுவலகத்திடம் முறைப்பாடுகளை செய்திருந்தன.

இந்த முறைப்பாடுகளில் கூறப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் ஒப்கோம் இந்த விசாரணைகளை நடத்த உள்ளதாக கூறப்படுகிறது. ஒப்கோம் அலுவலகம் பிரித்தானியாவில் உள் சுயாதீனமான ஊடகங்களை நிர்வகிக் கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. (ஸ்ரீ-2)

# பேருந்துக்கட்டண மீளாய்வுக்கு எதிராக மனுத்தாக்கல் செய்யதிட்டம்

## தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் அண்மையில் அறிவிக்கப்பட்ட பேருந்து கட்டண மீளாய்வுக்கு எதிராக நீதிமன்றத்தை நாடவுள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

அத்தோடு குறித்த பேருந்துக் கட்டணம் போதுமானதாக இல்லை என சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார். எனவே குறித்த மீளாய்வுக்கெதிராக மனுவொன்றை தாக்கல் செய்யவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களுக்கு தரமிக்க சேவையினை வழங்குவதற்காக தனியார் பேருந்து சேவையின் பங்களிப்பை முழுமைப்படுத்துவதே இதன் நோக்கம் என கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-4)

# கலாநிதி சோ.கிருஷ்ணராஜா நினைவுப் பேருரை-2011

08

## பல்வகைகள் ஒன்று சேர்தல்

## [Assemblage of Multiplicity]

**கே.டானியல்** *(1925-1985)*

கே.டானியல் இலக்கியவாதி. யாழ்ப்பாணச் சமூகத்தின் இன்னொரு வாழ்க்கை முறையையும் பண்பாட்டையும் தமது நாவல்களிற் கொணர்ந்தவர். யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட மக்களாகக் கருதப்



கலாநிதி மௌனகுரு
யாழ் பல்கலைக்கழகம்

படும் பஞ்சமர்களும் அவர்களின் வாழ்வும் போராட்டங்களுமே இவர் நாவலின் கருப்பொருட்கள். அவரது பஞ்சமர், பஞ்சகோணம், கானல், கோவிந்தன் ஆகிய நாவல்களில் தாழ்த்தப்பட்ட யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் வாழ்வுச் சித்தரிப்பினையும் அவர்கள் அடக்கப்பட்ட முறைகளையும் காணலாம். உரிமை மறுக்கப்பட்ட தமிழர்கட்காகச் சிறுவயதிலிருந்தே போராடிய ஒரு போராளி இவர். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினரான இவர் மாக்ஸிஸ உலகில் 1960 களின் நடுப்பகுதியில் ஏற்பட்ட பெரும் சித்தாந்த பிளவின் போது சீன மாஓசேதுங் வழி சென்றவர். சீனாவின் மாபெரும் கலாச்சார புரட்சியினால் ஈர்க்கப்பட்டவர். தமிழில் தலித் எழுத்துக்களின் முன்னோடி என்று தமிழ்நாட்டில் அழைக்கப்படுபவர். இவ்வகையில் ஈழத்துத் தமிழரின் பேசப்படாத மக்களின் வாழ்வையும் பேச்சுக்களையும் இலக்கியத்துள் கொண்டு வரும் ஒருவராகவும் ஈழத் தமிழ்ப் பண்பாட்டின் இன்னொரு கூறையும் எழுத்துக்களில் வெளிக் கொண்டு வரும் எழுத்தாளர்களுள் ஒருவராகவும் டானியல் முகிழ்த்தார். 1950 தொடங்கி 1970 களிலும் நடந்து கொண்டிருந்த சாதிப் போராட்டங்களிற் பங்கேற்ற டானியல் பல சமயங்களில் தலைமை தாங்கியும் நடாத்தினார். அந்த அனுபவங்களைத் தன்னுடைய எழுத்துக்களின் வழியாகப் படைப்புக்களாக்கினார். ஒரே சமயத்தில் வர்க்க, சாதிப் போராட்டங்களின் வரலாறாகவும் சமகால ஈழத்து இலக்கியத்தின் புதிய வெளிப்பாடாகவும் அவை அமைந்துவிட்டன.

இவரின் எழுத்துக்களும் சிந்தனைகளும் இலக்கியமுறைகளும் பின்வரும் சேர்க்கைகளினால் உருவானவையே.

1.இவர் பிறந்த பஞ்சம சமூகம்

2.இவரின் குடும்பம், தொழில், எதிர்கொண்ட அடக்கு முறைகள், அவரது ஆளுமை

3.யாழ்ப்பாணத்தில் தோன்றிய இடதுசாரிச்சிந்தனைகள்

4.அக்காலத்தில் இவருக்கு

**19 ஆம் நூற்றாண்டின் பின் ஈழத்தமிழர் மத்தியில் உருவான கலை - இலக்கியப் போக்குகளை தெரிந்தெடுக்கப்பட்ட சிலருக்கூடாகப் புரிந்து கொள்ளல்**

கிடைத்த இடதுசாரி கார்த்திகேசன், கந்தையா, அரியரத்தினம், சண்முகதாசன் போன்ற கம்யூனிஸ சிந்தனையாளர் உறவு

5.மாக்ஸிய தத்துவம்

6.கம்யூனிஸ் உலகில் ஏற்பட்ட சித்தாந்தப் பிளவும் சீனாவின் செல்வாக்கும்.

7.மாசேதுங் சிந்தனைகள், சீனக் கலாசாரப் புரட்சி

8.முற்போக்கு எழுத்தாளர், முற்போக்கு தத்துவப் பின்னணியுடையோரின் உறவுகள்

இப் பன்மைகளின் ஒன்று சேர்விற்றான் டானியலின் சிந்தனைகளும் இலக்கியங்களும் உருவாகின.

**பேராசிரியர் க.கைலாசபதி** *(1934-1983)*பேராசிரியர் கைலாசபதி தமிழ்



சோ. கிருஷ்ணராஜா

இலக்கிய ஆய்வாளர், இலக்கிய விமர்சகர். மலேசியாவிற் பிறந்தவரான இவர், யாழ்ப்பாணத்திற் கல்வி பயின்று தம் உயர்கல்வியினைப் பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் கலாநிதி ஆய்வை பெர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்திற் பேராசிரியர் தொம்சன் கீழும் செய்தவர்.

பல்துறைகளையும் (அரசியல், பொருளியல், சமூகவியல், பண்பாட்டியல்)இணைத்து ஆராயும் ஒரு பல்துறை அணுகுமுறை ஆய்வாளர்.

(தொடரும்)

# எமது சமூகத்தின் சமகால சவால்களும் கல்வியும்

08

யாழ்/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுநர், பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை நினைவுப்பேருரை-2011

யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள வடக்குக் கிழக்கில் எம் மக்களது வாழ்க்கையினையும் அவர்களது பொருண்மியச் செழுமையினையும் பாதுகாப்பான எதிர்காலத்தினையும் கட்டியெழுப்புவதற்கு நாம் கடுமையாக, மிகவும்கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது. எமது கடும் உழைப்புடன் அரசாங்கத்தினதும் சர்வதேசங்களினதும் புலம்பெயர் சமூகத்தினதும் உதவிகளும் பலமும் இணையும் போது நாம் நினைத்தவாறு மீள் எழ முடியும் அவையாவற்றிற்கும் அடிப்படையான மனித வளத்தை சிறந்தமுறையில் கையாண்டு வளப்படுத்துவதனூடாகவே தேசத்தின் சமாதானமும் செழுமையும் தனிமனிதர்களினதும் சமூகங்களினதும் கண்ணியமும் சுதந்திரமும் நீடித்த காலத்திற்கு நிலைத்து நிற்கும். இதற்கான ஒரேவழி கல்விதான்.

இதனடிப்படையில் எங்களதும் எங்களது பிள்ளைகளினதும் கற்றற் செயற்பாடுகள் பின்வரும் குறிக்கோள்களை நோக்கியதாக மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளன.

அ)விரைவான பொருண்மிய செழுமைக்காக உழைக்கக்கூடிய பல்திறன் ஆற்றல்கள் கொண்டவர்களாக எமது உழைப்பாளர்களும் எதிர்காலத் தலைமுறையும் பயிற்றுவிக்கப்படல்.

ஆ) ஒவ்வொரு மனிதனதும் கண்ணியத்தையும் ஆற்றல்களையும் அபிலாசைகளையும் மதித்து அவர்களுக்கு உரிய இடத்தினை வழங்கக் கூடிய, திறந்ததும் ஆரோக்கியமானதும் உத்தரவாதம் நிறைந்ததுமான அரசியல், சமூக மற்றும் பண்பாட்டுச் சூழலினைக் கட்டியெழுப்பும் கூட்டுப் பங்காளராக சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தவரையும் தயார்ப்படுத்தல்.

இ)தற்போதுள்ள அரசியல் நிர்வாகம், பொருளாதார மற்றும் சமூக கட்டமைப்புக்கள், நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் அல்லது பங்கேற்கும் அனைத்துத் தொகுதியினரும், யுத்தத்தின் பாதிப்புக்களிலிருந்து எமது சமூகம் துரிதமாகவும் நிதானத்துடனும் பரந்துபட்ட நோக்குடனும் மீள் எழுச்சி பெறுவதற்கு வழிசெய்யும் வகையில் இணைந்து செயற்படுவதற்கு ஏதுவாக தம்மை மாற்றத்திற்கு உட்படுத்த முன்வருதல்.

பெருமைக்குரிய கல்விச்சமூகத்தினரே!

ஒருபுறத்தில் துரிதப்படுத்தப்பட்ட அபிவிருத்திக்காக விஞ்ஞானம், வர்த்தகம், தொழிற்றுறை, கணனியும் தகவற் தொழி நுட்பமும், மருத்துவம், பொறியியல், விவசாயம் எனப் பல்கலைக்கழகப் பட்டங்களைக் குறிவைத்தும் வேலைவாய்ப்புக்களைக் குறிவைத்தும் உயர் வருமான பதவி நிலைகளைக் குறிவைத்தும் எமது பிள்ளைகளைப் பாடசாலைகளுடாகத் தயார்படுத்திக் கொண்டிருக்கிறோம். கடந்த சில தசாப்தங்களில் இழந்து போனவற்றை ஒருசில வருடங்களுக்குள் மீளப்பெற ஆவலாக உள்ளோம். ஆனால், இதனைத் தற்போது நடைமுறையிலுள்ளதும் பலவித மட்டுப்பாடுகளினைக் கொண்டதுமான அரசாங்கத்தின் கல்விக் கட்டமைப்பினாலோ அல்லது தேசிய நோக்கங்களுக்காக தயாரிக்கப்பட்ட பாடத்திட்டங்களினாலோ மட்டும் அடைந்து விடமுடியாது. எங்களிடமுள்ள ஆசிரியவளமும் கல்வி

திருமதி-பிரேமாவதி செல்வின் இறேனியஸ்
மேலதிகமாகாணக் கல்விப்பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடமாகாணம்.

நிர்வாக ஆளணியும் பல்கலைக் கழகங்களின் புலமையாளர்களும் கூட யுத்தகாலத் தேய்மானத்துக்கு உட்பட்டவர்களாகவும் புதிய சவால்களுக்கு முகம் கொடுக்கவும் அவற்றினை வெற்றிகரமாக முகாமை செய்யவும் பயிற்றப்படாதவர்களாகவே உள்ளோம்.

(தொடரும்)

# கடமை, கண்ணியம், கட்டுப்பாடு நிறைந்த 7 ஆம் எண்ணில் பிறந்தவர்களே!

இப்போது இல்லற சந்நியாசிகளாகிய 7 ஆம் எண்காரர்களைப் பற்றி விரிவாகப் பார்ப்போம். சோதிடநூல்கள் எல்லாம் இந்தக் கேதுவைப் பற்றி மிகவும் பயமுறுத்துகின்றன.கேதுவைப் போல் கெடுப்பானில்லை! இராகுவைப் போல கொடுப்பானில்லை என்று சோதிட சாத்திரங்கள் கூறுகின்றன. இவர் விஷ்வபாகு என்ற அரக்கனேயாவார்.(புராண காலத்தில்) பல்வேறு காரணங்களினால் தேவர்கள் மிகவும் பலவீனமாகவும் சோர்ந்தும் இருந்தார்கள்.

அசுரர்களை விட தேவர்கள் மிகவும் பலம் குன்றியிருந்தனர். அசுரர்களின் செல்வாக்கு அப்போது ஓங்கியிருந்தது. தங்களது பலவீனத்தை எப்படி போக்குவது என்ற சிந்தனையில் தேவர்கள் ஆழ்ந்தனர்.

மகா விஷ்ணுவின் ஆலோசனைப்படி தேவர்களும் அசுரர்களும் (இவர்கள் பாற்கடலைக் கடையச் சம்மதிக்க வைத்தது தனிக் கதை) ஒன்று சேர்ந்து உலக நன்மைக்காகப் பாற்கடலை, மேருமலையை மத்தாகக் கொண்டு கடைந்தனர்.பாற்கடலைக் கடையும் போது திடீரென அதன் அச்சு சாய்ந்து விட்டது. அதைச் சீர்படுத்தவே தேவர்களின் பிரார்த்தனையின் படி திருமால் மச்ச அவதாரம் எடுத்து மேரு மலையை நிமிர்த்திக் கொடுத்தார்.தேவர்கள் மீண்டும் கடைவதற்கு உதவினார்.

பின்பு பாற்கடலில் இருந்து முதன் முதலாக கொடிய விஷம் திரண்டு வந்தது. அதைப் பார்த்துப் பயந்து ஓடிய தேவர்கள் சிவபெருமானைச் சரணடைந்தனர். அவரும் அந்த ஆலகால நஞ்சைத் தானே எடுத்து அதை அருந்தினார். ஆனால் தனது கணவரின் உயிரைக் காப்பாற்ற எண்ணிய பார்வதி தேவி சிவபெருமானின் கண்டத்திலேயே (தொண்டையில் அந்த நஞ்சை நிறுத்தி விட்டார். அன்றிலிருந்து சிவபெருமானும் திருநீலகண்டர் என்று அழைக்கப்படுகிறார்.) இதன் பின்னர் காமதேனு, இலட்சுமி போன்ற தேவர்களும் மேலும் அரிய பொருட்களும் பாற்கடலிலிருந்து தோன்றின. இறுதியாக தன் வ்ந்திரி பகவான் தன் கையில் அமிர்த கலசத்துடன் வெளிவந்தார்.

அதைத் தாங்களே பங்கு கொள்ள என்று தேவர்களுக்கும் அரசுர்களுக்கும் இடையே கடும் பிரச்சினை எழுந்தது. தேவர்கள் மீண்டும் மகாவிஷ்ணுவிடம் ஓடினார்கள். அமுதத்தை தங்களுக்குப் பெற்றுத் தரும்படி வேண்டினார்கள்.

எனவே விஷ்ணு பகவான் மோகினி அவதாரம் எடுக்க வேண்டியதாயிற்று. தன்னுடைய அழகால் அசுரர்களின் மதியினை மயக்கினார். தேவர்களை ஒரு வரிசையாகவும் அசுரர்களை எதிர் வரிசையாகவும் அமர்த்தி முதலில் மிகவும் சாமர்த்தியமாகத் தேவர்களுக்கு அளித்தார்.

இந்தச் சூழ்ச்சியை தன்னுடைய ஞானதிருஷ்டியால் அறிந்து கொண்டு விஷ்வபாகு என்ற அசுரன் சாமர்த்தியமாக தேவர் உருவம் எடுத்துக் கொண்டு சூரிய, சந்திரர்களிடையில் வந்து அமர்ந்து கொண்டார்.பின்பு அமிர்தம் அவரது கைக்கு வந்தவுடனேயே மிகவும் அவசரமாக உட்கொண்டார்.

சந்தேகமடைந்த சூரிய, சந்திரர்கள் விஷ்வபாகு என்ற அந்த அரக்கனின் சூழ்ச்சியைத் திருமாலிடம் காட்டிக் கொடுத்தனர்.

இதையறிந்த திருமாலும் அரக்கன் மேல் மிகவும் கோபம் கொண்டு அசுரனின் உடலை துண்டித்து விட்டார். அமுதம் உண்டதால் அந்த அரக்கன் சாகவில்லை. பாம்பின் உடலைப் பெற்றுச் சிரஞ்சீவியானான்.

விஷ்வபாகு என்ற அந்த அரக்கனின் உடலானது பாம்பின் தலையைப் பெற்றுக் கேதுவானது. விஷ்வபாகுவின் தலையானது பாம்பின் உடலைப் பெற்று இராகுவானது.

நைசிர்க (இயற்கை) பலத்தில் இராகுவும் அதைவிடக் கேதுவும் பலம் பெற்றவர்கள். சூரியனை விட இவர்கள் பலம் பெற்றவர்கள்(மற்ற ஆறு கிரகங்களை விடப் பலம் வாய்ந்தவர் சூரியன்தான்).இந்த இராகு, கேது பற்றிய புராணக்கதை வாசகர்களுக்கு தெரிந்திருக்க வேண்டும் என்பதற்காக மிகவும் சுருக்கமாக இந்தக்கதையை விபரித்துள்ளோம்.

## ஆன்மீக நாட்டம் கொண்டவர்கள்

இராகு, கேதுக்களின் பிறப்பை பற்றியும் வாசகர்கள் அறிந்து கொண்டால்தான் இராகு, கேதுக்களின் தன்மையைப் பற்றி அறிந்து கொள்ள முடியும். வெளிநாட்டினருக்கு இந்தக் கதை தெரிந்தால் தான் இராகுவை Dragons Tail என்றும் கேதுவை Dragons Head என்றும் அழைத்தனர். இந்த எண் மனிதனின் சக்திக்கு அப்பாற்பட்டது. மற்ற எண்களெல்லாம் மனிதனின் பிரார்த்தனைகளுக்கும் சக்திக்கும் வசியங்களுக்கும் கட்டுப்பட்டவை. ஆனால் இந்த 7 எண் மட்டும் இறைவனின் சர்வவல்லமை மிகுந்த எண்ணாக உள்ளது.

இவர்களது பேச்சில் எப்போதும் பரம்பொருள், விதி, இறைவன் என்ற வார்த்தைகள் மிகுந்திருக்கும். 7 ஆம் எண்ணானது இளமைக் காலத்தில் போராட்டங்களையும் வறுமையையும் (பெரும்பாலோர்க்குக்) கொடுக்கும். ஆனால் நடு வயதிற்கு மேல் பெருத்த யோகங்களையும் பெரும் செல்வத்தையும் கொடுத்து விடும். இவர்கள் தங்களின் கடுமையான உழைப்பில் வந்த பணத்தை ஏழைகளின் நல்வாழ்வுக்காகவும் ஆலயத் திருப்பணிகளுக்காகவும் பொதுத் தொண்டிற்காகவும் அநாதை ஆசிரமத்திற்காகவும் செலவழிப்பார்கள்.

இவர்கள் உடையில் எளிமையும் ஆனால் சுத்தமும் இருக்கும். தங்களது கடமையிலேயே மிகவும் கவனமாக இருப்பார்கள். இவர்களது செயல்களில் ஒரு கண்ணியம், கட்டுப்பாடும் இருக்கும். உலகத்தை உய்விக்க வந்த இயேசு கிறிஸ்து (Jesus Christ), ஆதிசங்கராச்சாரியார், ரவீந்திரநாதத்தாகூர் ஆகியோரெல்லாம் இந்த 7 ஆம் எண்ணில் பிறந்தவர்களே!

இவர்களுக்குச் சித்து விளையாட்டுக்கள் எல்லாம் எளிதில் கைகூடும். இவர்கள் உலகப்பயணம் செய்து தங்களது அனுபவங்களை உலகத்தாருக்கு அழகுடன் எடுத்துரைப்பார்கள்.

பொருளாதார நிலை 7 ஆம் அன்பர்களுக்கு திருப்திகரமாக இருக்காது. வேதனைகளும் சோதனைகளும் இவர்களைத் தொடர்ந்து வரும்.எந்த ஒரு செயல் செய்யத் தொடங்கினாலும் அதை நிறைவேற்றுவதற்காகப் பல தடைகளைச் சந்திக்க வேண்டிவரும்.

கேது பகவான் கொடுக்க ஆரம்பித்தால் அதை வேறு யாரும் (கிரகங்கள்) அழிக்கவோ, தடுக்கவோ முடியாது என்பது சோதிட உண்மையாகும். எப்படியும் நல்ல வளமான் வாழ்க்கையைத் தங்களது வாழ்நாளில் அடைந்து விடுவார்கள்.

7 ஆம் எண்ணின் பலம் குறைந்த அன்பர்கள் பலர் உயர் கல்வி அமைந்திருந்தும் திறமைக்கேற்ற ஊதியம் கிடைப்பது தடைப்படும். பெரும்பாலான 7 ஆம் எண்காரரர்கள் இதனை நினைத்து வேதனையும் வாழ்க்கையில் விரக்தியும் அடைகின்றனர்.

பல இலட்சக்கணக்கான மூலதனத்தைப் போட்டும் செய்தொழில் முன்னேற்றத்தைக் காணாத நபர்களின் எண்கள் 7 ஆக இருப்பதைக் காணலாம்.அதேபோன்று இந்த எண்காரரர்கள் தொழில் திடீரென தாழ்ந்து மஞ்சள் கடிதம் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கியத்திற்கும் ஆளாகின்றார்கள்.

ஆனால் இந்த அன்பர்கள் சலிக்காமல் மனோதைரியத்துடன் வாழ்க்கையில் போராடுவார்கள். 3 ஆம் எண்காரரர்கள் போன்று இவர்களும் மற்றவர்களுக்காக விட்டுக் கொடுப்பார்கள். அண்ணன் சொத்து எடுத்துக் கொண்டாரா, பரவாயில்லை. மனைவி அவமதிக்கிறாளா? என் தலைவிதி என்று இருப்பார்கள். உற்றாரும் ஊராரும் மதிப்பதில்லையே. என்னை ஒருநாள் மக்களும் உறவினர்களும் பாராட்டுவார்கள் என்ற நம்பிக்கையும் எதையும் தாங்கிக் கொள்ளும் மனோபலமும் உண்டு.மனதில் கற்பனை வளரும். பிரபஞ்ச சக்தியுடன் உடனடித் தொடர்பும் இவர்களுக்கும் கிடைக்கும்.

தங்களது வாழ்க்கையில் கடினமாக உழைத்துத்தான் முன்னேற வேண்டுமே தவிர அடுத்தவர்கள், உறவினர்கள் உதவுவார்கள் என்று எதிர்பார்க்கக்கூடாது.ஒன்பது எண்களிலும் 9 ஆம் எண்ணுக்கே முன்கோபம் உண்டு. அதை அடுத்து இந்த 7 ஆம் எண்காரரர்களுக்கும் முன் கோபம் அடிக்கடி வரும்.இந்தக் குணத்தினாலேயே இவர்களது நல்ல செயல்களும் குணங்களும் மக்களால் மறக்கப்படுகின்றன.

பொதுவாகத் தங்கள் மனதில் உள்ளதை அப்படியே வெளியில் சொல்லிவிடமாட்டார்கள். இவர் கள் ஆத்மபலம் மிகுந்தவர்கள். அடுத்தவர்களின் தூண்டுதலை எதிர்பார்க்க மாட்டார்கள். இவர்கள் நீதிக்கும் தர்மத்திற்கும் போராடுவார்கள்.மக்களுக்காக மனம் விரும்பி உழைப்பார்கள். அவர்களின் செய்நன்றியைப் பிரதிபலனாக எதிர்பார்க்க மாட்டார்கள் என்பதே இவர்களின் உயர்ந்த குணமாகும்.

### இவர்களது தொழில்கள்

இவர்கள் சினிமா நட்சத்திரங்களாகப் பிரகாசிப்பார்கள். இந்த எண்காரரர்கள் பிரபல பாடகர்களாக, கலைஞர்களாக, கவிஞர்களாக, புகழ் பெற்ற எழுத்தாளர்களாக, பெரிய விடுதிகளின் உரிமையாளர்களாக இருப்பார்கள்.

புடைவைத் தொழில், பெற்றோல், டீசல், பால், தயிர், சோடா, பான வகைகள், ஐஸ்கிரிம், புகையிலைப் பொருட்கள் விற்பனை போன்ற தொழில்கள் நல்ல அதிர்ஷ்டத்தைத் தரும். திரவ சம்பந்தப்பட்ட அனைத்துத் தொழில்களும் இவர்களுக்குப் பெருத்த இலாபங்களைக் கொடுக்கும். உத்தியோகங்களில் சிறப்பிருக்காது. அதாவது பதவி உயர்வுகள் ஏதாவது ஒரு காரணம் முன்னிட்டு இவர்களுக்குத் தள்ளிப் போய்க் கொண்டிருக்கும். சமையல் கலைகளிலும் பெயர் பெற்றவர்களாக இருப்பார்கள்.

சட்டம், நீதித்துறை ஆகியவற்றிலும் வேலைகள் அமையும். மருந்துக் கடையும் இவர்களுக்குத் சிறந்த இலாபத்தைத் தரும்.

(தொடரும்)





ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட தலைமைச் செயலகம் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரத் தொழிலாளர் சங்க அலுவலகம் ஆகியவற்றின் திறப்புவிழா நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கோயில் வீதியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சிறுவர் அபிவிருத்தி பெண்கள் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தேசியக் கொடியேற்றி மரியாதை செலுத்துவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-அலுவலகச் செய்தியாளர்)

# அரசியலில் குதிப்பது பற்றி சிந்திக்கப் போவதில்லை

## குமரன் பத்மநாதன் தெரிவிப்பு



பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவிகள் செய்வதே தமது தற்போதைய இலக்கு என தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

தற்போதைக்கு அரசியல் குறித்து சிந்திக்கப் போவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த நேர்காணலின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு முன்னர் ஆதரவளித்த புலம்பெயர் தமிழர்கள் இலங்கைக்கு விஜயம் செய்ய விரும்பினால் முழுமையான பாதுகாப்பு வழங்கத் தயார் என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழவிடுதலைப்புலிகளின்பணத்தைப் பேணி வருவோரின் தரவுகளை வெளியிட்டு துரோகச் செயல் மேற்கொள்ளப் போவதில்லை. யார் யார் பணத்தை வைத்திருக்கின்றார்கள் என தெரிவித்து அவர்களை காட்டிக் கொடுக்கப் போவதும் இல்லை.

புலிகளின் பணத்தை பேணுவோர் பற்றிய தகவல்கள் இருப்பதாகவும் அவற்றை வெளியிடப் போவதாகவும் முன்னைய செவ்வி ஒன்றில் குமரன் பத்மநாதன் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பணத்தை வைத்திருப்போர் தாமாகவே முன்வந்து வடக்கு மக்களுக்கு உதவிகளை வழங்க வேண்டும் என்பதே தமது நோக்கும் ராஜீவ் காந்தி படுகொலை உள்ளிட்ட கடந்த கால குற்றச் செயல்களுக்காக ஏற்கனவே மன்னிப்பு கோரியுள்ளதாகவும் தொடர்ச்சியாக பழையவற்றை கிளறுவதில் அர்த்தமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஸ்ரப்பின் மரணத்துடன் புலிகளுக்கு தொடர்பு காணப்பட்டதா என்பது தமக்கு தெரியாது எனவும் அவ்வாறு ஏதேனும் தொடர்பு இருந்தால் அதற்காக மன்னிப்பு கோரத் தயார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந)

# சனல் 4 காணொளியை மகாநாயக்க தேரர்களுக்கு காண்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)

சனல் 4 காணொளியை மகாநாயக்க தேரர்களுக்கு காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

போலியான குற்றச்சாட்டுக் களை சுமத்தி இலங்கையின் நற்பெயருக்கு அபகீர்த்தி ஏற்படுத்த சில தரப்பினர் முயற்சி மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

அலவப் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த காணொளியை ஜனாதிபதியுடன் இணைந்து அலரிமாளிகையில் தாம் பார்வையிட்டதாகவும் இக் காணொளி போலியானது என்பதனை பார்த்த மாத்திரத்தில் புரிந்து கொள்ள முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விரைவில் மகாநாயக்க தேரர்களுக்கும் இந்த காணொளியை காட்சிப்படுத்த உத்தேசித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# முச்சக்கர வாகனங்களில் அளவுக்கதிகமான ஆட்களை ஏற்றுவதற்குத் தடை

(கொழும்பு)

முச்சக்கர வாகனங்களில் அளவுக்கு அதிகமாக ஆட்களை ஏற்றுவது சட்டவிரோதமானது எனவும் இவ்வீதியை மீறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸ் பேச்சாளரான பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவிக்கையில், முச்சக்கர வாகனங்களில் அளவுக்கு அதிகமாக ஆட்களை ஏற்றுவது சட்டவிரோதமானது எனவும் முச்சக்கர வாகனங்கள் வீதிகளில் விபத்துக்குள்ளாவதற்கு இதுவே பிரதான காரணம் எனவும் தெரிவித்தார்.

முச்சக்கர வாகனங்களில் அதிகபட்சமாக நால்வர் மாத்திரம் செல்வதே பாதுகாப்பானது எனவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-4)

# 2011.07 05 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1295-இங்கிலாந்துக்கு எதிராக ஸ்கொட்லாந்தும் பிரான்சும் கூட்டை உருவாக்கின.

★ 1610-நியூபவுண்ட்லாந்து தீவை நோக்கிய தனது பயணத்தை ஜோன் கை பிறிஸ்டலில் இருந்து 39 குடியேறிகளுடன் கடற்பயணத்தை ஆரம்பித்தார்.

★ 1687-ஐசாக் நியூட்டன் தனது புகழ்பெற்ற பிரின்சிப்பியா மாத்தமாட்டிக்கா நூலை வெளியிட்டார்.

★ 1770-ரஷ்யப் பேரரசுக்கும் ஒட்டோமான் பேரரசுக்கும் இடையில் செஸ்மா என்ற இடத்தில் போர் இடம்பெற்றது.

★ 1811-வெனிசுவேலா ஸ்பெயினிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1830-பிரான்ஸ் அல்ஜீரியாவினுள் நுழைந்தது.

★ 1865-Salvtion Army இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1884-ஜேர்மனி கமரூனை ஆக்கிரமித்தது.

★ 1900-ஆஸ்திரேலியப் பொதுநலவாய சட்டம் பிரித்தானிய பாராளுமன்றில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

★ 1945-இரண்டாம் உலகப் போர்: பிலிப்பைன்சின் விடுதலை அறிவிக்கப்பட்டது.

★ 1950-கொரியப் போர்: அமெரிக்கப் படைகளுக்கும் வட கொரியாப் படைகளுக்கும் இடையில் முதலாவது மோதல் ஆரம்பமானது.

★ 1950-சியோனிசம்: யூதர்கள் அனைவரும் இஸ்ரேலில் குடியேற அனுமதி அளிக்கும் சட்டம் இஸ்ரேலில் கொண்டுவரப்பட்டது.

★ 1951-சந்தி திரான்சிஸ்டரை வில்லியம் ஷொக்லி கண்டுபிடித்தார்.

★ 1954-பிபிசி தன் முதல் தொலைக்காட்சிச் செய்தியை ஒளிபரப்பியது.

★ 1962-பிரான்சிடமிருந்து அல்ஜீரியா விடுதலை அடைந்தது.

★ 1970-கனேடிய விமானம் ஒன்று டொரொண்டோ விமான நிலையத்தில் மோதியதில் 109 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1971-ஐக்கிய அமெரிக்காவில் வாக்களிக்கும் வயது எல்லை 21 இலிருந்து 18 ஆகக் குறைக்கப்பட்டது.

★ 1975-போர்த்துக்கல்லிடம் இருந்து கேப் வேர்ட் விடுதலை பெற்றது.

★ 1977-பாகிஸ்தானில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பிரதமர் சுல்பிக்கார் அலி பூட்டோ பதவி இழந்தார்.

★ 1996-குளோனிங் முறையில் முதலாவது பாலூட்டி டோலி என்ற ஆடு ஸ்கொட்லாந்தில் பிறந்தது.

★ 1998-செவ்வாய்க் கோளுக்கு தனது முதலாவது விண்கலத்தை ஜப்பான் ஏவியது.

★ 2004-இந்தோனேசியாவில் முதலாவது ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்றது.

★ 2006-வடகொரியா குறைந்தது இரண்டு குறுகிய தூரம் பாயும் ஏவுகணைகளையும் ஒரு ஸ்கட் ஏவுகணையையும் ஒரு நீண்ட தூரம் பாயும் ஏவுகணையையும் சோதித்தது.

### பிறப்புக்கள்

★ 1653-தோமஸ் பிட், மதராசின் பிரித்தானிய ஆளுநர் (இ.1726)

★ 1996-டோலி, முதல் குளோனிங் பாலூட்டி (இ.2003)

### சிறப்பு நாட்கள்

★ வெனிசுவேலா- சுதந்திரதினம் (1811)

★ அல்ஜீரியா- சுதந்திரதினம் (1962)

★ கேப் வேர்ட்-சுதந்திரதினம் (1975)

# கொஞ்சம் அமுதம் கொஞ்சம் விஷம்



## ஆன்மீகம் 40

"என் திருமணம் மிக எளிமையாக நடக்க வேண்டும் என்பது என் விருப்பம். ஆனால், நான் ஒரே மகன் என்பதால், அதை ஆடம்பரமாக நடத்தவேண்டும் என்று என்பெற்றொர் அடம்பிடிக்கிறார்கள். அவர்களைச் சந்தோசப்படுத்துவதற்காக என் இலட்சியத்தை விட்டுக்கொடுப்பதா?"

ஆடம்பரமான திருமணம் பற்றிய கேள்வியாக மட்டுமே இருந்திருந்தால், இதை வேறுவிதமாக அணுகலாம். ஆனால், 'என் சந்தோஷம் முக்கியமா, என் பெற்றோரின் சந்தோஷம் முக்கியமா?' என்று கேட்கிறீர்கள். இதற்கு நான் என்ன பதில் சொன்னாலும், அதைத் தவறாகப்புரிந்து கொண்டு உங்களுக்கு ஏற்றபடி திரித்துக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. ஒன்று மட்டும் நிச்சயம்... இன்னொருவரின் சந்தோஷத்துக்காக விட்டுக்கொடுப்பதாகச் சொல்வது வெறும் கண்துடைப்பு. உண்மையில் இன்னொருவருடைய மகிழ்ச்சி உங்களுக்கு வேதனை தரும் என்றால், அதைச் செய்ய விரும்புகிறீர்களா? அடுத்தவர் மகிழ்ச்சியில் உங்களுக்கும் மகிழ்ச்சி என்பதால் தானே அவர் விருப்பப்படி நடக்க முனைகிறீர்கள்? சமூகத்தில் நீங்கள் தனியாள் அல்ல. எத்தனையோ பேர் உங்களுக்குத் தேவைப்படுகிறார்க்ள். அவர்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க, சாதுர்யமாக நீங்கள் பல விதமாக காய்களை நகர்த்துகிறீர்கள்.

உங்கள் மகிழ்ச்சியை உத்தேசித்துத் தான் அடுத்தவரின் மகிழ்ச்சியை நீங்கள் முன்வைக்கிறீர்கள். உங்கள் வாழ்க்கையின் ஒரு பேரம் அது. ஏதோ ஒன்றை தியாகம் செய்வது கூட உங்கள் மன விருப்பத்தினால்தானே? அதை யாருக்காகவோ செய்வதாக ஏன் உங்களை ஏமாற்றிக்கொண்டு, வேண்டா வெறுப்பாகச் செய்கிறீர்கள்?

நீங்கள் ஒரு விதமாகச் செய்ய நினைத்தீர்கள்; உங்கள் பெற்றோர் வேறுவிதமாகச் சொன்னார்கள் அவர்களின் விருப்பத்துக்கு மதிப்புக் கொடுப்பது என்று முடிவு செய்து விட்டால், அதை ஆனந்தமாகச் செய்யுங்களேன். எதற்காகப்புலம்பிக் கொண்டே செய்கிறீர்கள்?

## வாழ்க்கை ஒரு நீரோட்டம்

"என் விருப்பப்படி செய்தால், அவர்கள் காயப்பட்டுப் போவார்கள். அவர்கள் விருப்பப்படி செய்தால், என்னைக்குற்ற உணர்வு தாக்கும். அதுதான் குழப்பம்!"

தெளிவான முடிவு எடுக்கமுடியாத போதெல்லாம் பொறுப்பை மற்றவர் தலையில் கட்டிவிட்டு, அவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பதாக உங்கள் மனம் உங்களை ஏமாற்றுகிறது. அதுதான் விடயம். மரணப்படுக்கையில் இருந்த தொழிலதிபர், தன் மகன்களை அழைத்தார். "என் சொத்தை உங்களுக்குப்பிரித்துக் கொடுக்கிறேன். ஆனால், நான் சம்பாதித்த பணம் என்னுடன் வர வேண்டும் என்று விரும்புகிறேன். எனவே என்னைப்புதைக்கும்போது, கூடவே ஆளுக்கொரு இலட்சம் பணத்தை வைத்துப் புதையுங்கள்" என்றார்.

அவர் இறந்த பிறகு, அவர் உடலைப் புதைத்து விட்டுத் திரும்பும் வழியில் மூத்தவன் சொன்னான்... "நான் தவறு செய்து விட்டேன். அப்பா இனிமேல் எண்ணிப் பார்க்கப் போகிறாரா என்ன என்று வெறும் பத்தாயிரம்தான் கவரில் வைத்தேன்!"

இளையவன்சொன்னான்..."சேச்சே! இப்படியெல்லாம் அப்பாவை ஏமாற்ற எனக்கு இஷ்டமில்லை. நான் நேர்மையாக ஒரு லட்சத்துக்கு செக் எழுதி வைத்துவிட்டேன்!"

யார் புத்திசாலி? அடுத்தவரின் சந்தோஷத்தைக் காரணமாகச் சொல்லிக்கொண்டே இரண்டாவது மகனைப்போல் காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் புத்திசாலிகள் இருக்கிறார்கள். உங்கள் மகிழ்ச்சி எது என்று தேர்வு செய்யும் உரிமை உங்களிடம் தான் இருக்கிறது.

உங்கள் சந்தோசம் எது? அது உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவதில் இருந்தால், அதன்படி செய்யுங்கள். அல்லது, அடுத்தவர் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதில் இருந்தால் அதன்படி முடிவு எடுங்கள்.

ஆனால் எந்தவிதமாக முடிவு எடுத்தாலும், அதற்கொரு பின் விளைவு உண்டு என்பதை மறக்காதீர்கள். அது என்னவாக இருக்கும் என்பது பற்றிய தெளிவான சிந்தனை உங்களுக்கு வேண்டும். உங்களுக்கு ஏற்றதொரு பின் விளைவு கிடைக்க வேண்டும் என்றால், அதற்கேற்ற செயலில் இறங்குங்கள். முடிவு செய்துவிட்டால், எப்படிப்பட்ட பின் விளைவு வந்தாலும், அதை மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்ளத்தயாராகுங்கள். நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதை விட, அதை எப்படிச் செய்கிறீர்கள் என்பது தான் உங்கள் வாழ்க்கையின் தரத்தைத் தீர்மானிக்கும்.

வாழ்க்கையை ஒரு நீரோட்டம் போல் வைத்துக்கொள்ளுங்கள். இதுதான் சரி, இது தப்பு என்று எதனுடனாவது உங்களைப் பிணைத்துக்கொண்டீர்கள் என்றால், பாறை போல் இறுக்கமாகி விடுவீர்கள்.

எந்தக்கருத்துடனும் எந்தத்தீர்மானத்துடனும் எந்த உணர்ச்சியுடனும் உங்களை உறைய வைத்துக் கொள்ளாதீர்கள். பாறைபோல் இறுக, இறுக... புதிய அனுபவங்களை எதிர்கொள்ளும் திறனை இழந்து விடுவீர்கள் உங்களை நீங்களே ஊனப்படுத்திக் கொண்டவராகி விடுவீர்கள்.

அதேபோல், சந்தோசம் இல்லாமல் எதையும் செய்யாதீர்கள். ஆனந்தமாக இல்லாதிருப்பது. மாபெரும் குற்றம். எதைச்செய்தாலும், அது உங்கள் ஆனந்தத்தின் வெளிப்பாடாக அமைந்து விட்டால்... இது சரியா, அது சரியா என்ற சந்தேகங்களே எழாது. இதுபோன்ற கேள்விகளும் மறைந்து விடும்!

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# சிறுகதை வளர்ச்சியில் சிற்றிதழ்களின் பங்கு 01

தமிழ் இலக்கிய வரலாற்றில், சிறுகதை வளர்ச்சியில் சிற்றிதழ்களின் பங்கு இந்தத் தலைப்பிற்குள் போவதற்கு முன்னால் சிறுகதைகளின் தொடக்கம் பற்றியும் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது.

பழந்தமிழ்ப் பண்டிதர்கள் காலத்தில் சிறுகதையை அவர்கள் வரவேற்கவில்லை. சிறுகதையை இலக்கியம் என்றுகூட அவர்கள் எண்ணுவதில்லை. சிறுகதை எழுதுவோரை அவர்கள் பரிகாசக் கண்ணோடுதான் பார்த்து வந்ததாக டாக்டர் மு.வெங்கடாஜலபதி தனது ஆய்வில் குறிப்பிடுகிறார்.

சிறுகதைகளை அலட்சியம் செய்துவந்த காலம் இன்று மலையேறிவிட்டது. சிறுகதை இலக்கியம் இப்போது அமோக வளர்ச்சி பெற்றுள்ளது. பத்திரிகைகளில் சிறுகதைகள் முதன்மைபெற்ற சூழலையும் நாம் பார்த்திருக்கிறோம். பெரும்பாலும் மக்களின் மனப்போக்கை ஒட்டி வளர்வதே இலக்கியம். மக்களின் மனப்போக்கும் நடையுடையும் காலப்போக்கில் மாற்றம் அடைந்து வருவதையும் காண்கிறோம். இதற்கு ஏற்றாற்போலவே இலக்கியமும் மாற்றமடைந்து கொண்டே வருகிறது. எனவே இன்று வளர்ச்சி அடைந்துள்ள சிறுகதை இலக்கியத்தை யாரும் அலட்சியப்படுத்தமுடியாது.

சிறுகதை எழுதும் முறை என்பது நமக்கு முற்றிலும் புதிது. இது மேல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வடிவம். மேல் நாட்டு மொழிப் பயிற்சி நமக்குக் கை வந்த பிறகு தான் சிறுகதைகள் எழுதக் கற்றுக் கொண்டோம். என்ற உண்மையையும் நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். சிறுகதைகளைத் தனி இலக்கியமாக விளங்கும் வகையில் வளர்த்தவர்களில் மேல்நாட்டினருக்குத்தான் நிறையப் பங்கு இருக்கிறது.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

சிறுகதை என்பது ஒரு பக்கத்திலும் இருக்கலாம் ஐம்பது பக்கங்களில் கூட இருக்கலாம். நிகழ்வுகள் மட்டும் ஒன்றே ஒன்றாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் சிறுகதைக்குள் இலட்சியம் இருக்கவேண்டும். சொல்லவந்த கருத்தை தெளிவாக புரியும்படி சொல்லவேண்டும்.

சிறுகதைக்கும் நாவலுக்கும் உள்ள வேறுபாட்டை புதுமைப்பித்தன் இங்கே தெளிவாக குறிப்பிட்டுள்ளார். சிறுகதை வாழ்க்கையின் சாரம் என்றால் நாவல் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் நிலைக்கண்ணாடி. வாழ்க்கையின் சிக்கல்களை அதன் உயர்வை அதன் சிறுமைகளை, உலாவும், பாத்திரங்களை மனிதக் கூட்டத்தின் சலனத்தில் அவற்றின் குண விஸ்தாரத்துடன் சிருஷ்டிப்பது தான் நாவல். நாவலுக்குக் கால எல்லை கிடையாது. சென்றகாலம், நிகழ் காலம், வருங்காலம், இவற்றின் நிகழ்ச்சியை, மனோதர்மத்தால், சிருஷ்டியின் மேதை குன்றாமல் கற்பனை செய்வதுதான் நாவல்.

சிறுகதை வாழ்க்கையின் ஒரு பகுதியை, மற்றவற்றின் கலப்பை மறந்து, ஏன் விட்டுவிட்டுக் கவனிக்கிறது என்று சிறுகதை பற்றி புதுமைப்பித்தன் குறிப்பிடுகிறார். மேலும் கதையை வாசிப்பது நமது சிந்தனையின் சலனத்தை ஊக்குவிப்பதற்கு ஒரு தூண்டுகோல் கதை முடிவடையும்போது அதைப் பற்றிய சிந்தனை முடிவடைந்து விடாது. இப்படிப்பட்ட கதைகள் முடிவடைந்த பின்புதான் ஆரம்பமாகின்றன என்றும் குறிப்பிடுகின்றார்.

சிறுகதை வளர்ச்சியின் வரலாற்றை உற்று நோக்கும்போது அதன் கால அளவை நான்கு கட்டங்களாக பிரித்துப்பார்க்க முடிகிறது. முதல் கட்டம் என்று எடுத்துக் கொண்டால் 1900-1925 களில் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே மேலை நாட்டு மரபை ஒட்டியே சிறுகதை வளர்ச்சி தொடங்கிவிட்டது. ஆங்கிலத்திலும் தமிழிலும் நாவல் படைத்து வந்த அ. மாதவையா 1910 ஆம் ஆண்டில் இருந்து நாளிதழில் வாரம் ஒரு சிறுகதையாக 27 சிறுகதைகள் எழுதியிருக்கிறார். பின்பு அக்கதைகள் 1912 ல் Kusika's Short Stories என்ற பெயரில் இரண்டு தொகுதிகள் வெளிவந்தது. பின்பு பன்னிரண்டு வருடங்கள் கழித்து 1924 இல் இக்கதைகளில் பதினாறை மாதவையாவே தமிழில் மொழி பெயர்த்து குசிக்கா குட்டிக் கதைகள் என்ற பெயரில் வெளியிட்டார்.

**-நந்தவனம் சந்திரசேகரன்**


(தொடரும்)

# இன்சுலின் சிகிச்சை முறைகள்

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் முறைகளில் மருந்து மாத்திரைகள் முக்கியானவை.

உணவு மற்றும் உடற்பயிற்சியால் மட்டுமே நீரிழிவு நோயுள்ளவர்கள் நோயைக் கட்டுப்படுத்திக்கொள்ள இயலாத நிலை ஏற்படும்போது அவர்களுக்கு சிகிச்சை தேவைப்படுகிறது.

மருந்துகள் பெரும்பாலும் கணையத்தைத் தூண்டி இன்சுலினை சுரக்கச் செய்வதற்கும், இரத்த சீனியை கட்டுப்பாட்டில் இருப்பதற்கும் இன்சுலின் தேவையை சீராகவைக்கவும் இந்த மாத்திரை மருந்துகள் பயன் தருகின்றன.




பல நோயாளிகள் மாத்திரைகளை தாங்களாகவே வாங்கிபயன்படுத்திக்கொண்டு பின்விளைவுகளால் பாதிக்கப்படலாம் என்பதால் மாத்திரைகளின் பெயர்களை இங்கே குறிப்பிடாமல் அதன் வகைகளை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

சல்பைனல் யூரியா (சாப்பிட இரண்டு மணி நேரத்தில் இருந்து 24 மணி நேரம் வரை வேலை செய்யக்கூடிய மாத்திரை வகையைச் சேர்ந்தவை.· சாப்பிட்ட இரண்டு மணி நேரத்திலிருந்து பன்னிரண்டு மணி நேரம் வரை வேலை செய்வது, உணவுக்குப் பின்னர் ஒரு மணி நேரத்திலிருந்து அறுபது மணி நேரம் வரை பயனளிக்கக் கூடியது.)

இதையடுத்து மெக்லிடினைட்ஸ், பைகுவானைட், ஆல்பா குளோசிடேஸ் தடுப்பான்கள், இன்சுலின் சென்சிடைசர் மற்றும் தயோஜோலிடினைடோன் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

இவற்றை வாய் வழியாகவே நோயாளிகளுக்கு தரலாம்.

வாய் வழியாகக் கொடுத்தால் பயன் தராத மருந்துகளும் இருக்கின்றன. அவை இன்சுலின்.

நீரிழிவு நோயாளிகள் எல்லோருக்குமே இன்சுலின் மருந்தைப் பற்றிய விபரங்கள் தெரிந்திருக்கும்.

காரணம் நீரிழிவு நோயாளிகள் இன்சுலின் சார்ந்த நீரிழிவு நோயாளிகள், இன்சுலின் சாராத நீரிழிவு நோயாளிகள் என்ற இரண்டு பிரிவினர் இருக்கிறார்கள்.

இவர்கள் அனைவருமே கண்டிப்பாக இன்சுலினை பயன்படுத்தவேண்டிய கட்டாயத்தில் இருப்பவர்கள்.

இன்சுலின் சார்ந்தவர்கள் குழந்தைகள் மற்றும் இளம் வயதினர் ஆகியோர். இவர்களின் கணையத்தில் உள்ள பீட்டா செல்கள் அழிந்து போவதால் இன்சுலின் சுரப்பு நின்று, நீரிழிவு நோய் வந்திருக்கும்.

இன்சுலின் சாராதவர்கள் என்போர் வயது வந்தோர். இவர் ஆரம்பத்தில் உடல் நலம் மிக்கவராக, ஆரோக்கியமானவராக இருந்திருப்பார். ஆனால் வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், பாரம்பரியம் போன்ற காரணங்களால் இன்சுலின் சுரப்பதில் சிக்கல் ஏற்பட்டு நீரிழிவு நோயாளியாக மாறியிருப்பார்.

இந்த நோயாளியின் உடலில் இன்சுலின் எவ்வாறு செயற்பட வேண்டுமோ அவ்வாறு செயற்படுவதில்லை.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் இன்சுலின் சார்ந்த நோயாளிகள் தங்களுடைய கட்டுப்பாடான உணவுமுறை, உடற்பயிற்சி, வாய் வழியாக எடுத்துக் கொள்ளும் மருந்துகள் ஆகியவற்றை சரியாகத் கடைப்பிடித்தால் இரத்த சீனி அளவை கட்டுப்படுத்த முடியும். ஆனால் இன்சுலின் சாராத நோயாளிகளால் அவ்வாறு செய்ய இயலாது.

உணவுக்கட்டுப்பாடு, உடற்பயிற்சி, வாய்வழி மருந்து எடுத்தல் ஆகியவற்றால் இவர்களின் குளுக்கோஸ் கட்டுப்பாட்டுக்குள் வராது. இவர்கள் கண்டிப்பாக இன்சுலினை ஊசி வடிவில் தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

சுருக்கமாகக் கூறவேண்டுமானால் பதினாறு வயதுக்கு உட்பட்ட நோயாளிகள் தினமும் இன்சுலின் ஊசியைப் போட்டுக் கொண்டால் மட்டுமே உயிர்வாழ முடியும்.

**இன்சுலின் வகைகள்**

எல்லா நோயாளிகளுக்கும் ஒரே மாதிரியான இன்சுலின் தரப்படுவதில்லை. பல



வழிகளில் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபடும் இன்சுலினை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**முதலாம் வகை**

இன்சுலினில் நான்கு முக்கிய வகைகள் உள்ளன.

1. விரைந்து செயற்படக்கூடியது.
2. நடுத்தரமாக செயற்படக்கூடியது.
3. முன்பே கலந்தது.
4. நீண்ட காலம் செயற்படக்கூடியது.

இவை விரைந்து செயற்படுவதிலும், நீண்ட நேரம் செயலாற்றலுடன் இருப்பதிலும் உச்சக்கட்டமாக செயற்படுவதிலும் வேறுபடுகின்றன.

விரைந்து செயல்புரியும் இன்சுலினை ரெகுலர் இன்சுலின் என்பார்கள். இது குறுகிய காலம் மட்டுமே செயல் புரியும்.நாள் முழுவதும் பல முறை இந்த ஊசியைப் போட்டுக்கொள்ள வேண்டும்.

இவை ஒரு மணி நேரத்திற்குள் வேலை செய்யத் ஆரம்பிக்கும். இதன் பலனை உடல் விரைந்து ஏற்றுக்கொள்ளும். நடுத்தரமாகச் செயல்புரியும் இன்சுலின் மெதுவாக வேலை செய்யத் ஆரம்பிக்கும்.

தினமும் ஊசியைப் போட்டுக் கொண்டால் போதும். வழக்கமாக வேலை செய்யும்.

நீண்டு செயற்படக்கூடிய இன்சுலின் இருக்கிறது. இது இருபத்து நான்கு மணி நேரம் வரை நிலைத்து நிற்கும்.

முன்பே கலந்த இன்சுலின் என்பது, ரெகுலர் மற்றும் நடுத்தரமாக செயல்புரியும் இன்சுலின் கலவையை கலந்து ஒன்றாக்கப்பட்டு ஊசி வடிவில் கிடைக்கும். இதுவும் நாள் முழுவதும் செயற்படக் கூடியது.

(தொடரும்)

பேராசிரியர்
டாக்டர் டி.காமராஜ்,
M.D.,P.G.D.C.G.,D.M.R.,
சென்னை.




# தாடை அறுவை சிகிச்சை



02

இம்முறையினால் அறுவை சிகிச்சை செய்யும் நேரம் மற்றும் மருத்துவமனையில் இருக்க வேண்டிய நாட்களும் வெகுவாகக் குறைந்து உள்ளது. உடம்பில் பிற உறுப்பிலிருந்து எலும்பு எடுப்பதால் ஏற்படும் பின் விளைவுகளும் இதில் அறவே நீக்கப்படுகிறது. சிகிச்சைக்குப் பின் பழைய நிலை ஏற்பட வாய்ப்புக் கிடையாது மற்றும் இதனால் பின் விளைவுகள் எதுவும் நேரிடாது. அறுவை சிகிச்சையின் பொழுது வாயினுள் டிஸ்ட்ராக்டர் பொருத்த வேண்டிய இடத்தைக் குறித்துக்கொண்டு, எலும்பை வெட்டும் கருவியைக் கொண்டு தாடையில் மெலிதாகக்கோடிட வேண்டும்.

பின்பு டிஸ்ட்ராக்டரைப் பொருத்திவிட்டு, பிளக்க கோடிட்ட இடத்தை ஆழமாக வெட்டி எலும்பைப் பிளக்க வேண்டும். திருகு ஆணிகளால் திடமாகப் பொருத்தப்பட்ட டிஸ்ட்ராக்டர் இருப்பதால், எலும்பு பாகங்கள் விலகிவிடாது. இவ்வாறு பொருத்தியபின், ஆறு நாட்கள் கழித்து வாயின் வெளியே தென்படும் டிஸ்ட்ராக்டரின் சிறு கம்பியைத் திருகிவிடவேண்டும். நோயின் கடுமைக்கு ஏற்றவாறும், குழந்தையின் உடல்நிலைக்கு ஏற்றவாறும் திருப்பங்கள் கொடுக்கப்படுகின்றன.

வாயினுள் பொருத்தப்படும் டிஸ்ட்ராக்டர்கள் முதலில் பிரான்ஸ் நாட்டின் தலைநகரமான பாரிசில் உருவாக்கப்பட்டது. இவற்றில் மிகவும் சிறிய டிஸ்ட்ராக்டர்கள் உதடு மற்றும் அண்ணப்பிளவு உள்ள குழந்தைகளுக்கு உபயோகிக்கப்பட்டது.

இப்படிச் செய்வதால் பின்னர் சிரமமான அறுவை சிகிச்சைகள் செய்வதைத் தவிர்க்கலாம். உதடு மற்றும் அண்ணப்பிளவு பெரும்பாலும் மேல் தாடையைப் பாதிப்பதால், அவை சுருங்கிக் காணப்படும். தாடையைப் பிரித்து வெளியே கொண்டுவர இயலும். அறுவை சிகிச்சை மிகவும் கடினமானது. இந்நிலையில் இந்தச் சிறு கருவிகளை மேல் அண்ணத்தில் பொருத்திவிட்டால் நாளடைவில் தேவையான அளவிற்கு அது வளர்ந்து விடும்.

பொதுவாக வயதானவர்களுக்குப் பற்களை எல்லாம் பிடுங்கிவிட்ட பின்னர் மிஞ்சி உள்ள எலும்பின் உயரம் பல்செட்டு செய்வதற்கு பற்றாமல் போய்விடும். இவ்வாறான வயதானவர்களுக்கு உயர அளவைக் கூட்ட உடம்பிலிருந்து எலும்பை எடுத்துப் பொருத்துவது நல்தாக இருக்காது. எனவே எலும்பின் உயரத்தைக் கூட்டவும் சிறு டிஸ்ட்ராக்டர்கள் வெற்றிகரமாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

முன்பு குறிப்பிட்டதுபோல ட்ரெச்சர் காலின் என்ற குறைபாட்டில் முகத்தில் பல எலும்புகள் பாதிக்கப்படுவதால் இதற்குப் பல திசை டிஸ்ட்ராக்டர்கள் பொருத்த வேண்டும். இவை மூன்று கோணங்களிலும் வளர்ச்சியை உண்டாக்கி குறைபாட்டை நீக்கிவிடும். தேவையான வளர்ச்சி அடைந்த பின்னும் இக்கருவியின் கம்பிகள் திருகப்படாமல் சில நாட்களுக்கு விடப்படுகிறது. இவ்வாறு விடுவதால் புதிதாக வளர்ந்த எலும்புகள் முதிர்ச்சி அடைந்து அதன்மேல் உள்ள தசைப் பகுதிகள் வளரவும் உதவுகிறது.

தாடை மூட்டு நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கீழ்த்தாடையின் ஒரு பாகம் வளர்ச்சியின்றி இருக்கும். இவர்களுக்கு தாடையின் உயரத்தை மட்டும் கூட்டுவதற்கு ஒரு திசை டிஸ்ட்ராக்டரை உபயோகிக்கலாம். இவற்றைப் பொருத்தும் இடம் குறைபாட்டின் தன்மைக்கு ஏற்றவாறும் எலும்பின் வலிமையையும் பொறுத்து உள்ளது. இப்படிப்பட்ட நவீன கருவியை உபயோகிக்கும்முன் பார்க்க வேண்டியவை நோயாளியின் உடல் நிலை, குறைபாட்டின் வலிமை, வளர்ச்சிக்கான தன்மை, மனப்பக்குவம் போன்றவை. சிகிச்சை முடிந்த பின்னர் சிறு அறுவை சிகிச்சையினால் கருவியை எடுத்துவிடலாம்.


இவை எல்லாவற்றையும்விட குறிப்பிடத்தக்கது பியரிராபின் என்ற வளர்ச்சி குறைபாடு. இதில் பிறக்கும் குழந்தையின் கீழ்த்தாடை சிறிதளவும் இருக்காது. இதனால் குழந்தையின் நாக்கு, தொண்டையில் முடங்குவதால் மூச்சுத் திணறல் ஏற்படும். இம்மாதிரியான அபாய நிலையில் குழந்தையின் கழுத்தில் கீரலிட்டு மூச்சுவிட எளிதாக்குவார்கள். இப்படிச் செய்வதால் குழந்தைக்கு மிகவும் கடினமாகும். அது மட்டுமன்றி வளர்ந்த பின்னும் கழுத்தில் அந்தத் தழும்பு இருக்கும். இக்குறைகளைத் தடுக்க பிறந்த குழந்தைகளுக்கு மிகவும் சிறிய டிஸ்ட்ராக்டர் பொருத்துவதால் விரைவில் பிறரைப் போல மூச்சுவிடவும் முடியும் மற்றும் தாடையின் தோற்றமும் நன்றாக இருக்கும்.

(முற்றும்)

முகச் சீரமைப்பு நிபுணர்
டாக்டர் எஸ்.எம்.பாலாஜி MDS,
சென்னை-18

# மீள்குடியேற்ற நடவடிக்கையில் உலக நாடுகளை விட இலங்கை முன்னிலை வகிக்கின்றது

## அமைச்சர் பசில் பெருமிதம்



(யாழ்ப்பாணம்)

நீண்டகாலம் யுத்தம் இடம்பெற்றாலும் மீள்குடியேற்ற நடவடிக்கையில் இலங்கை உலக நாடுகளைவிட முன்னிலையில் உள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வடமராட்சிக் கிழக்கில் நேற்று முன்தினம் மக்கள் மீள் குடியேற்றப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், நீங்கள் பிறந்து வாழ்ந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து பல துன்பங்களை அனுபவித்த பின்பு மீண்டும் மீள்குடியேறியுள்ளீர்கள். பிறந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து செல்லும்போது உங்கள் மனம் எவ்வாறு துன்பம் அடைந்ததோ அதைவிட சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படும் போது பல மடங்கு ஆனந்தம் அடையும்.

இந்த பிரதேசம் யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட பிரதேசம். இங்கு பாரிய அளவில் நிலத்தில் குழிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மிதிவெடிகளின் பயன்பாடும் இப்பகுதியில் அதிகமாகவே இருந்துள்ளது. அவற்றை அகற்றும் நடவடிக்கையில் அரசாங்கம் முனைப்புடன் செயற்படுகிறது.

உலக நாடுகளில் இலங்கையைப் போன்று இவ்வாறு மிகவிரைவில் மீள்குடியேறிய நாடுகள் எதுவும் இல்லை. ஐரோப்பிய நாடுகள் கூட இவ்வாறு மக்களை மீள்குடியேற் றுவதை விரைவு படுத்தியதில்லை.

போரினால் பாதிப்படைந்த பாடசாலைகள், வைத்தியசாலைகள், பொது நிலையங்கள் என்பன புனரமைப்பு செய்யும் நடவடிக்கை தற்போது விரைவுபடுத்தப்பட்டுள்ளது.

மக்களுக்கான வாழ்வாதார உதவிகளும் இப்பகுதியில் அதிகமாக வழங்கப்படுகின்றன. இராணுவத்தால் 10 நாட்களில் இந்த வீடுகள் அமைக்கப்பட்டு உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான திறமை இலங்கை இராணுவத்திற்கு மட்டுமே உள்ளது. எனவே இங்குள்ள மக்களின் மீள்குடியேற்றத்தில் அரசாங்கம் அதிக அக்கறையுடன் உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

# தரமற்ற பெற்றோல் குறித்து முறையிடலாம்

(கொழும்பு)

பெற்றோல் பாவனையால் வாகனங்கள் பழுதடைந்தாலோ அல்லது செயலிழந்தாலோ அது தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காக மூன்று தொலைபேசி இலக்கங்களை பெற்றோலிய வளத்துறை அமைச்சு வெளியிட்டுள்ளது.

இதன்படி 0115664941, 0115666228 மற்றும் 0115665082 ஆகிய இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு தங்களது முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பொது மக்களின் முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு பெற்றோலிய வள கூட்டுத்தாபனத்தின் விற்பனை பிரிவுக்கு அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது. (ஸ்ரீ)

# பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் மாநாடு இலங்கையில்

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் கலந்து கொள்ளும் மாநாட்டை எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு இலங்கையில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

54 நாடுகள் அங்கம் வகிக்கும் பொது நலவாய அமைப்பின் தலைவராக பிரித்தானிய மகாராணி செயற்பட்டு வருகிறார். அவரும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள உள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாடு அம்பாந்தோட்டையில் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

1976 ஆம் ஆண்டு இலங்யையில் அணிசேரா நாடுகளில் உச்சி மாநாடு நடத்தப்பட்டது.

இதன் பின்னர் அதிகளவான உலக நாடுகளின் தலைவர்கள் முதலாவது மாநாடு இதுவாகும். மாநாட்டை நடத்துவதற்கான ஏற்பாடுகளையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. (ஸ்ரீ-4)

# வடக்கு-கிழக்கு மக்களுக்கு இலவச சட்ட ஆலோசனைகள்

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்கு மக்களுக்கு தேவையான சட்ட ஆலோசனைகள் இலவசமாக வழங்கப்படும் என இலங்கை சட்ட ஆலோசனை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சட்ட ஆலோசனை வழங்கும் நோக்கில் வடக்கு-கிழக்கில் சுமார் 61 நிலையங்கள் உருவாக்கப்பட உள்ளன. ஏற்கனவே ஐந்து நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீள்குடியேற்ற. நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் எதிர்நோக்கும் அன்றாட பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காணி உரிமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் பிரதேச மக்கள் சட்ட ஆலோசனைகளை வேண்டி நிற்பதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-4)

# புகையிரத திணைக்களத்தில் 4 ஆயிரம் வெற்றிடங்கள்

புகையிரத திணைக்களத்தில் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் நிலவுவதாக ரயில்வே தொழிற்சங்க ஒன்றியம் தெரிவிக்கின்றது.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் பல வருடங்களாக மேற்கொள்ளப்படவில்லையென அதன் செயலாளர் சம்பத் ராஜித தெரிவித்துள்ளார். இதன் காரணமாக அதிகளவான ஊழியர்கள் மேலதிக நேரம் சேவையில் ஈடுபடுவதாகவும் அவர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்க நாளாந்தம் திணைக்களம் பெருந்தொகை பணத்தினை செலவிட நேரிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஊழியர்கள் மேலதிக சேவையில் ஈடுபடுகின்ற போதிலும் அவர்கள் அதிருப்தியுடனேயே பணியாற்றுவதாகவும் அவர் குறிப்பிட்டார். இக்குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் ரயில்வே பொது முகாமையாளர் பி.ஏ.பீ. ஆரியரத்தின கருத்துத் தெரிவிக்கையில்,

வெற்றிடங்கள் நிலவுவதாகவும் உரிய நடைமுறைக்கு அமையவே ஊழியர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவதாகவும் சில தொழிற்சங்கங்கள் புதிதாக ஊழியர் களை சேர்த்துக் கொள்வதற்கு எதிராக செயற்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வினை பெற்றுக் கொடுக்க முடியாத போதிலும் கால தாமதமின்றி வெற்றிடங்களை நிரப்புவதற்கு திட்டமொன்றை செயற்படுத்தியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-4)

# பாதாள உலக கோஷ்டி தலைவர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

சூரியவெவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பாதாள உலகக் கோஷ்டித் தலைவரான நெலுவ பிரியந்த என்பவர் கொல்லப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான பிரசாந்த ஜெயக்கொடி தெரிவித்தார்.


சுமார் 25 கொலைச்சம்பவங்கள் உட்பட பல்வேறு கடத்தல்,கப்பம்பெறல் மற்றும் போதைப் பொருள் வியாபாரம் உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய மேற்படி சந்தேக நபர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை காலை கைது செய்யப்பட்டநிலையில் தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.


இதனையடுத்து அவரால் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் ஆயுதங்கள் சிலவற்றைக் கைப்பற்றுவதற்காக சூரியகந்த பிரதேசத்துக்கு நேற்று முன்தினம் இரவு சந்தேகநபர் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

அங்கு அவர் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியொன்றினால் அதிரடிப்படையினர் மீது துப்பாக்கிச்சூடு நடத்த முற்பட்டதாகவும் இதனையடுத்து அதிரடிப்படையினர் நடத்திய பதில் துப்பாக்கிப் பிரயோகத்தில் அவர் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் சூரியவெவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாகவும் பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சூரியவெவ பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் சந்தேக நபரின் சடலம் தற்போது சூரியவெவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)







காரைநகர் திக்கரை முருகன் கோவில் மஹோற்சவத்தில் 3 ஆம் நாள் திருவிழா அன்று பிரபல நாதஸ்வர, தவில் மேதைகளின் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வின் போது தமிழருவி த.சிவகுமாரன் தலைமையுரை நிகழ்த்துவதையும் நாதஸ்வர வித்துவான் அள்வையூர் சிதம்பரநாதன் உபயகாரரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதையும் கௌரவம் பெற்ற கலைஞர்களுடன் விழா உபயகாரர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-காரைநகர் செய்தியாளர்)

# சீன இராணுவத்தில் பட்டதாரிகள்

(பீஜிங்)

சீன இராணுவத்தை நவீனப்படுத்தும் நோக்கத்தில் அதிகளவில் கல்லூரி மாணவர்களைச் சேர்க்கும் வகையில் அந்நாட்டின் சட்டத்தில் விரைவில் திருத்தம் கொண்டு வரப்படுகிறது.

உலகிலேயே அதிகளவில் 23 இலட்சம் இராணுவ வீரர்களைக் கொண்டது சீன இராணுவம். இராணுவத்தில் சேர இதுவரை உயர்நிலைப்பள்ளி தகுதி மட்டும் இருந்தால் போதும்.

ஆனால் தற்போது இராணுவத்தை நவீனப்படுத்தும் வகையில் அதிகளவில் கல்லூரி மாணவர்களைச் சேர்க்கும் வகையில் விரைவில் திருத்தம் கொண்டுவர சீனா திட்டமிட்டுள்ளது.

கடந்த 1984 ஆம் ஆண்டின் இராணுவ சேவை சட்டத்தில் உயர்நிலைப் பள்ளி முடித்தவர்கள் இராணுவத்தில் சேவை செய்ய தகுதி பெற்றவர்கள் என்றும் 18 வயது முடித்தவர்கள் கட்டாயமாக இராணுவத்தில் சேர வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

(ஸ்ரீ-4)

# தாய்லாந்து பாராளுமன்ற தேர்தலில் எதிர்க்கட்சி அமோக வெற்றி

## முதல் பெண் பிரதமராக யிங்லக் ஷினாவத்ரா தெரிவு

(தாய்லாந்து)

தாய்லாந்து நாட்டின் பாராளுமன்றத்தில் மொத்தம் 500 இடங்களுக்கு நேற்று முன்தினம் தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் தற்போதைய பிரதமர் அபிஜித் வெஜ்ஜாஜீவா தலைமையிலான ஜனநாயக கட்சி, யிங்லக் ஷினாவத்ரா தலைமையிலான பியூ தாய் கட்சி உள்ளிட்ட 42 கட்சிகள் போட்டியிட்டன.

நேற்றுமுன்தினம் மாலை வாக்குப்பதிவு முடிவடைந்து வாக்குகள் எண்ணப்பட்டன. 90 சதவீதம் வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் பியூ தாய் கட்சி 260 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. இதனால் அந்த கட்சியின் தலைவர் யிங்லக் ஷினாவத்ரா தாய்லாந்து நாட்டின் 28 ஆவது பிரதமராக தேர்ந்தெடுக்கப்படுகிறார். இதன் மூலம் அந்த நாட்டின் முதல் பெண் பிரதமர் என்ற அந்தஸ்தையும் பெறுகிறார்.

தேர்தலில் வெற்றிபெற்றுள்ள யிங்லக் ஷினாவத்ராவுக்கு பிரதமர் அபிஜித்வெஜ்ஜாஜீவா வாழ்த்து தெரிவித்துள்ளார். பாங்கொக்கில் உள்ள ஜனநாயக கட்சியின் தலைமை அலுவலகத்தில்அவர் பேசுகையில், தேர்தலில் பியூ தாய் கட்சி வெற்றி பெற்று விட்டது. ஜனநாயக கட்சி தோற்கடிக்கப்பட்டு விட்டது என்று தெரிவித்தார்.



தேர்தலில் வாக்களித்து வெற்றி பெற செய்த அனைவருக்கும் யிங்லக் ஷினாவத்ரா நன்றி தெரிவித்தார்.

44 வயதே ஆன யிங்லக் ஷினாவத்ரா தாய்லாந்து நாட்டின் முன்னாள் பிரதமரும் தொலைத்தொடர்பு துறையின் கோடீஸ்வரருமான தக்ஷின் ஷினாவத்ராவின் தங்கை ஆவார். கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற இராணுவப் புரட்சின் போது பிரதமராக இருந்த தக்ஷின், தாய்லாந்து நாட்டில் இருந்து தப்பி ஓடி டுபாயில் தஞ்சம் அடைந்தார்.

தற்போது நடந்து முடிந்த தேர்தலில் அவருடைய தங்கை யிங்லக் வெற்றி பெற்றுள்ளதால் தக்ஷின் மீண்டும் தாய்லாந்து நாட்டிற்கு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஸ்ரீ-4)

# லிபிய புரட்சிப் படைக்கு பிரான்ஸ் ஆயுத விநியோகம்

## டிரிபோலியை கைப்பற்றுவதற்கு வியூகம்

லிபிய நாட்டின் புரட்சிப்படை பிரான்ஸ் நாடு விமானம் மூலம் வீசிய இராணுவக் குவியல் கிடைத்ததால் உற்சாகமடைந்துள்ளது. இதனால் அது தலைநகர் டிரிபோலியை கைப்பற்றுவதற்கு ஆயத்தமாக உள்ளது. அடுத்த இரண்டு நாட்களில் டிரிபோலி வீழ்ந்து விடும் என்று புரட்சிப் படை கூறிவருகிறது.

லிபிய நாட்டில் ஜனாதிபதி கடாபியின் ஆட்சி 41 ஆண்டுகளாக நடந்து வருகின்றது. அவர் பதவி விலக வேண்டும் என்றும் ஜனநாயக ஆட்சி நடைமுறைக்கு வர வேண்டும் என்றும் கோரி புரட்சியாளர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்கள் ஆயுதம் ஏந்தி போர் புரிந்து வருகின்றார்கள்.

இராணுவத்தின் ஒரு பகுதியும் அவர்களுக்கு ஆதரவாக திரும்பி உள்ளது. பெங்காசி, மிஸ்ரட்டா ஆகிய நகரங்களை கைப்பற்றிய புரட்சிப்படை தலைநகர் டிரிபோலியை நெருங்கி உள்ளது.

புரட்சிப்படைக்கு உதவி செய்வதற்காக பிரான்ஸ் நாடு விமானம் மூலம் புரட்சிப் படையின் கட்டுப்பாட்டில் உள்ள நபூசா மலையின் மீது ஆயுதங்களை வீசின. இந்த ஆயுதங்கள் கிடைத்ததை தொடர்ந்து அந்த படை உற்சாகம் அடைந்து உள்ளது.

அத்தோடு நேட்டோ இராணுவத்தின் விமானத்தாக்குதல் தீவிரம் அடைந்து உள்ளதும் புரட்சிப் படைக்கு கூடுதல் உத்வேகத்தை கொடுத்துள்ளது.



புரட்சிப்படை இப்போது டிரிபோலி நகருக்கு அருகில் உள்ள நபூசா மலையில் உள்ள குகைகளில் தங்கி இருக்கிறது. அங்கு இருந்து வெளியேற அது ஆயத்தம் செய்து வருகிறது. அடுத்த 48 மணி நேரத்தில் அது தலைநகருக்கு செல்லும் வீதியில் உள்ள பகுதிகளை பிடித்து விடும் என்று புரட்சிப் படையின் செய்தி தொடர்பாளர் கேணல் அகமது ஓமர் பானி தெரிவித்தார்.

எதிர்வரும் 2 நாட்களில் டிரிபோலி வீழ்ந்து விடும் என்றும் அவர் குறிப்பிட்டார். கடாபி ஆதரவு இராணுவத்துக்கு சொந்தமான 2 பீரங்கிகள் சேதப்படுத்தப்பட்டன. நபூசா மலைக்கு அருகில் உள்ள கர்யன் என்ற இடம் கடாபி இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி ஆகும். இந்த இடத்தில் உள்ள இராணுவ வளாகத்தில் இருந்து கடாபியின் துருப்புகளுக்கு ஆயுதங்கள், ராங்கிகள் விநியோகம் செய்யப்படுகின்றன. இந்த இடத்தின் மீது நேட்டோ இராணுவம் தாக்குதல் நடத்தி பெரும் சேதத்தை ஏற்படுத்தி உள்ளது.

(ஸ்ரீ-4)

# மனித உணர்வுகளுடன் செயற்படக்கூடிய ரோபோ

ஜேர்மனியின் தொழில்நுட்ப பல்கலைக் கழகம், முனிச்நகரில் உள்ளது.

அதன் ரோபோ ஆராய்ச்சி பிரிவு விஞ்ஞானிகள் ரோபோவுக்கு மிக சிக்கலான பயிற்றுவிப்பு தொழில்நுட்பங்களை உருவாக்குவதில் வெற்றி கண்டுள்ளனர்.

அதன் மூலம் ஒரு வேலையை செய்யும் போது ஏற்படும் தவறை அடுத்த முறை ரோபோ தானாகவே திருத்திக் கொள்ளும்.


முந்தைய தவறுகளில் இருந்து பாடம் கற்கும் தொழில் நுட்பத்தை கொண்ட இந்த ரோபோவால் எதிர்காலத்தில் மனித இயல்புகளுடன் செயற்படக்கூடிய ரோபோ சாத்தியமாகலாம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்னனர்.


(ஸ்ரீ)




# ஐரோப்பாவை மிரட்டுவதை விட்டுவிட்டு பதவி விலகுங்கள்

## கடாபியிடம் ஹிலாரி கண்டிப்பு





(வோஷிங்டன்)

ஐரோப்பாவை மிரட்டுவதை விட்டு விட்டு நாட்டு மக்களின் நலனை மனதில் கொண்டு லிபியு ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்று அமெரிக்க வெளிநாட்டு துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் தன் ஆதரவாளர்கள் மத்தியில் தொலைபேசி மூலம் பேசிய கடாபி ஐரோப்பா மீது தாக்குதல் நடத்துவோம் என்று மிரட்டினார். இதற்குப் பதில் கொடுக்கும் வகையில் ஹிலாரி ஸ்பெயின் நாட்டில் நிருபர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

கடாபி ஐரோப்பாவை மிரட்டுவதை விட்டு விட்டு தன் நாட்டு மக்களுக்கு ஜனநாயக உரிமையை கொடுக்க வேண்டும். அவர்கள் மக்களின் நலனை கருத்தில் கொண்டு பதவி விலக வேண்டும். லிபியா மக்களை கடாபியிடம் இருந்து காப்பாற்றுவதற்காக நாங்கள் முயற்சித்து வருகிறோம். இவ்வாறு ஹிலாரி கூறினார்.

(ஸ்ரீ-2)

# ஒபாமா தங்கியிருந்த இடத்துக்கு அருகே அனுமதியின்றி பறந்த விமானம்

## அமெரிக்காவில் பெரும் பரபரப்பு

அமெரிக்க ஜனாதிபதி தங்கியிருந்த இடத்துக்கு அருகே அனுமதியின்றி சிறிய விமானம் ஒன்று திடீரெனப் பறந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தன் வார விடுமுறையைக் கழிப்பதற்காக மேரிலேண்ட் என்ற இடத்தில் தங்கியிருந்தார்.

இந்தப் பகுதியை அமெரிக்க இராணுவத்தினர் தீவிரமாகக் கண்காணித்து வந்தனர். ஜனாதிபதி ஒபாமா தங்கியிருந்த இடத்துக்கு அருகே வான் பகுதியில் திடீரென ஒரு சிறிய விமானம் ஊடுருவிப் பறந்தது.

இதைத் தொடர்ந்து தயார் நிலையையடைந்த இராணுவத்தினர் அந்த விமானத்தின் விமான ஓட்டுநரை தொடர்புகொள்ள முயற்சித்தனர். அது முடியவில்லை. இதையடுத்து அமெரிக்க இராணுவத்துக்குச் சொந்தமான ஜெட் விமானங்கள் அந்த விமானத்தை வழிமறித்தன.

அனுமதியின்றி ஊடுருவிய விமானத்தை ஹாகர்ஸ்டவுன் என்ற இடத்தில் கட்டாயப்படுத்தி தரையிறக்கினர். இதுகுறித்து அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவிக்கையில்,

அந்த சிறிய விமானத்தை செலுத்திய விமான ஓட்டி வழிதவறி அனுமதியில்லாத பகுதிக்குள் ஊடுருவி விட்டதாகத் தெரிய வந்துள்ளது. இதுகுறித்து தீவிரமாக விசாரித்து வருகிறோம் என்றனர்.

(ஸ்ரீ-4)

# பீரிசின் பாகிஸ்தான் பயணம் கடைசி நேரத்தில் கைவிடப்பட்டது



வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் நேற்று முன்தினம் பாகிஸ்தானுக்கு மேற்கொள்ளவிருந்த பயணம் கடைசி நேரத்தில் கைவிடப்பட்டுள்ளது.

தனது பயணத்தின் போது பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி மற்றும் பிரதமர் யூசுப் ரசா கிலானி ஆகியோரை வெளி விவகார அமைச்சர் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்தார்.

ஆனால் பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி வெளிநாடு சென்றிருப்பதால் வெளிவிவகார அமைச்சர் தனது பயணத்தை கடைசி நேரத்தில் கைவிட்டுள்ளார்.

இதையடுத்தே ஜி.எல்.பீரிசின் பாகிஸ்தான் பயணம் இந்த மாத பிற்பகுதிக்கு மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தான் ஜனாதிபதியின் வெளிநாட்டுப் பயணம் குறித்த தகவல் இலங்கை அரசுக்கு கடைசி நேரத்திலேயே தெரியப்படுத்தப்பட்டதாகவும் இதனால் ஜி.எல்.பீரிசின் பாகிஸ்தான் பயணத்துக்கு சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்ட நிலையில் அதைக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னர் பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி கொழும்பு வந்திருந்த போது அவரை அவசரமாக சந்தித்து விட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளிநாடு புறப்பட்டுச் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

# கதிர்காமர் படுகொலை வழக்கின் முக்கிய சந்தேகநபர் தப்பியோட்டம்

## இரகசிய பொலிஸார் தெரிவிப்பு

முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலைச் சம்பவம் தொடர்பான வழக்கின் பிரதான சந்தேக நபர் வெளிநாட்டுக்குத் தப்பியோடியுள்ளதாக இரகசியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜனநாயக மக்கள் முன்னிணியின் நிர்வாகச் செயலாளரான நடராஜா சிவராஜா அல்லது அன்பழகன் எனப்படுபவரே அவ்வாறு வெளிநாட்டுக்குத் தப்பியோடி விட்டதாக இரகசியப் பொலிஸாரால் கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு-13 கொட்டாஞ்சேனைப் பிரதேசத்தில் வசித்து வந்த பிரஸ்தாப சந்தேக நபர் முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைப் படுகொலை செய்வதற்கு விடுதலைப் புலி உறுப்பினர்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருவதை அறிந்திருந்த போதும் அது குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கத் தவறினார் என்று அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

ஆயினும் அவர் மீதான வழக்குத் தொடுக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸாருக்கு அறிவிக்காமல் அவர் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றுள்ளதாக இரகசியப் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதேநேரம் அவர் இல்லாமல் வழக்கைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு சாட்சிகள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்குமாறு நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. (ஸ்ரீ-4)

# சனல் 4 குற்றச்சாட்டுக்கள் உண்மைக்கு புறம்பானவையாயின் வழக்கு தொடருங்கள்

## மங்கள எம்.பி.அரசுக்கு ஆலோசனை



(கொழும்பு)

சனல் 4 குற்றச் சாட்டுக்கள் உண்மைக்கு புறம்பானவை என்றால் அந்த தொலைக்காட்சிக்கு எதிராக அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அகுரஸ்ஸ பகுதியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையர் என்ற வகையில் அனைவருக்கும் எதிராகவே இந்த குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பதே எமது நிலைப்பாடு என்று அவர் கூறினார்.

இத்தகைய பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் உண்மைக்கு புறம்பானவை என அரசாங்கம் நிராகரிக்குமானால் நாட்டினதும் இராணுவ வீரர்களினதும் ஜனாதிபதியினதும் நற்பெயரை பாதுகாப்பதற்காக இதற்கு எதிராக அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

சவேந்திர சில்வா போன்றவர்களை பயன்படுத்தி பொய் கூறுவது மாத்திரம் போதுமானதல்ல. அதனை நிரூபிப்பதற்கான சாட்சியங்கள் இருக்குமாயின் சனல் 4 இற்கு எதிராக அரசாங்கம் வழக்கு தொடர வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-4)

# வடக்கு-கிழக்கு நிலைமைகள் தொடர்பாக பாராளுமன்றில் விவாதம் நடத்த வேண்டும்

## த.தே.கூ.கோரிக்கை

வடக்கு கிழக்கு நிலைமைகள் குறித்து பாராளுமன்றில் விவாதம் நடத்தப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு கிழக்கின் தற்போதைய சூழ்நிலை மற்றும் தமிழ் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்தும் விவாதம் நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் குறித்த விவாதத்தை நடாத்துவதற்கு ஒருநாள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


வடக்கு கிழக்கு நிலைமைகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிக்கை ஒன்றை தயாரித்துள்ளது.

குறித்த விவாதம் நடைபெறும் தினத்தில் வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைகள் குறித்த அறிக்கை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

வடக்கு கிழக்கு மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு வழங்கப்பட வேண்டுமென கட்சி வலியுறுத்தியுள்ளது. (ஸ்ரீ-2)

# மக்கள் வங்கியின் பொன்விழா-2011

## முன்னாள் துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி



சொல்லும் செயலும் ஒன்றாய் இசைந்த நிறுவமைப்புகள் மக்கள் மனங்களில் இடம் பிடிக்கின்றன. இந்த வகையில் *மக்கள் மனமறிந்த வங்கி* என்ற மகுட வாசகத்தின் பொருளாகி இன்று தன் பொன்விழாப் பெருமையினைக் கொண்டாடும் மக்கள் வங்கியை வாழ்த்தும் இந்த வேளை அர்த்தமுள்ளது.

மக்கள் வங்கியின் தனித்துவம் அதன் வரலாற்று ஊற்றுக்களில் பொதிந்துள்ளது.

அன்றைய கூட்டுறவு வங்கியின் படிமலர்ச்சியாய் இன்றுவரை அதன் செயற்திட்டங்களை வழிப்படுத்தும் சமுதாய உணர்திறன், ஆடம்பரம் இல்லாத அர்ப்பணிப்பு என்பன மக்கள் வங்கியின் பொன்விழா பெருமிதத்தின் அடிப்படைகள் என்றால் மிகையில்லை.

சூழமைவின் நெருக்கடியான பொழுதுகளில் மக்கள் துணைக்கரமாய் விளங்குவதுடன் பொருளியல் நோக்கு போன்ற ஆக்கங்களின் வழி சமுதாய அறிவெல்லைகளை விரிவாக்குகின்றமை, சமூகப் பணிகளின் பங்காளர்களாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

சமூக-பண்பாட்டு உணர்திறனுடன் எல்லோர்க்கும் வாழ்வு என்ற உன்னதத்தை நோக்கி, மக்கள் வங்கியின் பணிகள் நிறைந்திட எல்லையில்லாத என் அன்புவாழ்த்துக்கள்.

பேராசிரியர் என்.சண்முகலிங்கன்,
சமூகவியல் பேராசிரியர்,
முன்னாள் துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## வாழ்த்துச் செய்தி

இலங்கையின் கிராமிய பொருளாதாரத்துடன் இரண்டறக் கலந்த தனது ஏற்ற மிகுசேவையில் 50 ஆண்டுகளை நிறைவு செய்து பொன்விழா காணும் பெருமை மிகு இத்தருணத்திலே மக்கள் வங்கிக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குதில் பெருமகிழ்வடைகிறேன்.

இலங்கையின் வங்கித்துறை வரலாற்றில் மக்கள் வங்கி தனக்கென ஒரு தனி இடத்தை பதித்து நகரங்கள், கிராமங்கள் என சகல இடங்களிலும் மக்களுக்கு அளப்பெரிய நிதியில் துறைசார்ந்த சேவைகளை வழங்கி வருகிறது என்பதை யாவரும் அறிவர்.

இதனால் தான் என்னவோ *மக்கள் மனமறிந்த வங்கி...* என்ற வாசகத்தை கேட்டவுடன் அது *மக்கள் வங்கி* என முடிக்கத் தோன்றுகிறது. குறிப்பிட்ட தசாப்தங்களுக்கு முன்னர் வங்கித் துறையின் சேவை நகர்ப்புறங்களிலுள்ள மேல்தட்டு மக்களுக்கு என காணப்பட்டிருந்த நிலையில் வங்கிச் சேவையினை சாதாரண மக்களுக்கும் கிடைக்கத்தக்க வகையில் கிராமங்கள்தோறும் கிளைகளை அமைத்து கிராமிய மக்களிடத்து வங்கி நிதிச் சேவையினை சென்று சேர்த்த பெருமை மக்கள் வங்கியையே சாரும் என்றால் அது மிகையல்ல.

விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி, குடிசைக் கைத்தொழில் என்கின்ற கிராமிய பொருளாதாரம் சார்ந்த வடக்கு-கிழக்கு மாகாண மக்களுக்கு மக்கள் வங்கி வழங்கி வருகின்ற சேவை என்றும் நினைவு கூரத்தக்க ஒன்றாகும்.

போர் முடிபடைந்த பின்னர், இன்று வடபகுதியை நோக்கி பெருமளவான வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்கள் சேவையாற்ற வந்துள்ளன. ஆனால் அன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் மக்களோடு மக்களாக நின்று பல்வேறு நிதிச் சேவைகளையும் வழங்கிய மக்கள் வங்கியினுடைய சேவை போற்றுதற்குரிய ஒன்றாகும். இன்றும்கூட வடபகுதியினுடைய பொருளாதார அபிவிருத்திக்காக பல்வேறு கடன் திட்டங்களையும் வழங்குவதில் மக்கள் வங்கி காட்டுகின்ற ஆர்வம் உண்மையிலேயே பாராட்டுதற்குரிய ஒன்றாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த மக்கள் வங்கி தனது ஏற்றமிகு சேவையினை மக்களுக்கு வழங்கி பல்லாண்டு பல்லாண்டு பலநூறு ஆண்டு வெற்றி நடைபோட வேண்டுமென எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இ.சிறீதரன்,
வட மாகாண முகாமையாளர்,
இலங்கை மத்திய வங்கி .

# ஏ.ரீ.எம்.மோசடிகள் அதிகரிப்பு; பொலிஸார் எச்சரிக்கை

ஏ.ரீ.எம்.மோசடிநடவடிக்கைகளின் எண்ணிக்கையில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. கொழும்பை அண்டிய பிரதேசங்களில் காணப்படும் தனியார் வங்கிகளுக்கு சொந்தமான ஏ.ரீ.எம்.களில் இவ்வாறு சட்ட விரோதமான முறையில் பணம் மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று வருவதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

பல மில்லியன் ரூபா இவ்வாறு தமது வாடிக்கையாளர்களிடமிருந்து மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நுட்பமான முறையில் வாடிக்கையாளர்கள் தரவுகளைப் பெற்றுக் கொண்டு இந்த மோசடி இடம்பெற்று வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் இரண்டு ரோமானியர்கள் உள்ளிட்ட கும்பலொன்று பாரிய ஏ.ரீ.எம் மோசடியில் ஈடுபட்டமை கண்டு பிடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தனியார் வங்கிகளில் 14 மில்லியன் ரூபா மோசடி செய்த குற்றச்சாட்டிற்காக குறித்த ரோமானியர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

மோசடி நடவடிக்கைகள் தொடர்பில் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதாக புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.(ஸ்ரீ-4)

நன்றி மறத்தலை, விலங்குகள் மனிதனுக்கு விட்டுவிடுகின்றன.
–சார்லஸ் செர்லட்டன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# மீளக்குடியமர்ந்த நம் உறவுகளுக்கு நாம் என்ன செய்தோம்?

வன்னி யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் இப்போது மீள்குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். நேற்று முன்தினம் வடமராட்சி கிழக்குப் பகுதியில் மீள்குடியேற்றம் இடம்பெற்றது.

சொந்த இடங்களில் மீள்குடியமர்த்துவது நல்ல விடயமாயினும், மீள்குடியமரும் போது தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது கட்டாயம் என்பது மறுக்க முடியாத உண்மை.

எந்தவித வருமானமும் இல்லாமல் முகாம்களில் அடைபட்டிருந்த மக்கள் மீளக்குடியமரும் போது அவர்களுக்கு ஏகப்பட்ட உதவிகள் தேவைப்படும்.

இந்த உதவிகளை அரசாங்கம், உலக நாடுகள், சர்வதேச தொண்டு நிறுவனங்கள் வழங்குதல் என்பதற்கு அப்பால் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மீளக்குடியமரும் எமது உறவுகளுக்கு நாங்கள் செய்த உதவி என்ன? என்ற கேள்வி எங்கள் ஒவ்வொருவரையும் உறுத்தவே செய்யும்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த கொடூரமான போரில் எல்லாவற்றையும் இழந்த எமது மக்களின் அவலம் போக்குவதற்கும் பாதிக்கப்பட்ட மாணவச் செல்வங்கள் இழந்த கல்வியை மீளப் பெறுவதற்கும் பாதிக்கப்பட்ட தொழில் முயற்சிகளை மீள் உருவாக்கம் செய்வதற்கும் ஏற்ற நடவடிக்கைகளை செய்தாக வேண்டும்.

இதற்காக புலம்பெயர் தமிழ் மக்களின் நிதி உதவியுடன் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் 'மீள்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் அமைப்பு' உருவாக்கப்பட வேண்டும்.

இந்த அமைப்புகள் புலம்பெயர் தமிழ் மக்களிடம் இருந்து நிதியுதவியினைப் பெற்று அந்த நிதி மூலம் அந்தந்தப் பிரதேச செயலர் பிரிவுகளில் மீளக்குடியமர்ந்த மக்களின் கல்வி மற்றும் தொழில் முயற்சி என்பவற்றுக்கான பங்களிப்பை ஆற்ற வேண்டும்.

இது மட்டுமன்றி உள்ளூரிலும் நிதி சேர்க்கும் முயற்சிகளைச் செய்யலாம். ஆலயங்களில் இடம்பெறும் படோபகார நிகழ்வுகளைத் தவிர்த்து அதற்கான செலவை மீளக்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரத்திற்காக வழங்குதல் மற்றும் சிறு தெய்வங்களுக்கு மிகப்பெரிய ஆலயங்கள் நிர்மாணிப்பதை விடுத்து சிறு தெய்வங்களை சிறிய ஆலயங்களிலேயே வழிபாடாற்றும் பாரம்பரிய நடைமுறைக்கு வழிவிட்டு பெரிய ஆலயமாக நிர்மாணிக்கவிருக்கும் மிகப்பெரும் தொகைகளை மீளக்குடியமர்ந்த மக்களின் நலனுக்காக ஒதுக்குதல் என்ற அடிப்படையில் ஒரு புதிய எழுச்சிப் பயணத்தைத் தொடர மேற்குறிப்பிட்ட அமைப்புகள் மிகவும் அவசியமானவை.

இதற்காக நாம் குறிப்பிட்டுக் கூறிய அந்த அமைப்புகளை ஆரம்பிக்க சமூக, சமயப் பற்றாளர்கள் முன்வர வேண்டும்.

# மீள்குடியேற்றப் பகுதிகளில் சிறுவர் துஷ்பிரயோகம் குடும்ப வன்முறைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை

## கிளி,முல்லை. பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

மீள்குடியேற்றப்படும் பகுதிகளில் சிறுவர் துஷ்பிரயோகம், குடும்ப வன்முறைகள் என்பன அதிகரித்து வருகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு கிராமங்கள், பொது இடங்கள் தோறும் விழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தப்பட்டு வருவதாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நில் தலுவத்த தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தத்தின் பின்பு மீள்குடியேற்றம் விரைவுபடுத்தப்பட்டுள்ளதோடு அபிவிருத்திப் பணிகளும் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இவற்றோடு சிறுவர் துஷ்பிரயோகம், குடும்ப பிரச்சினைகளால் ஏற்படும் வன்முறைகள், கலாசாரச் சீர்கேடுகள் என்பனவும் இங்கு அதிகரித்தே காணப்படுகிறது.

இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸாரின் ஏற்பாட்டில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றது.

இக்கருத்தரங்கில் கிராமசேவையாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊர்மக்கள் அனைவரும் பங்குபற்றுகின்றனர்.

இதன் மூலம் என்ன பிரச்சினையாக இருந்தாலும் பொலிஸில் முறையிட மக்கள் முன்வருவார்கள். இங்கு உள்ள பொலிஸ் நிலையங்களில் காணிப் பிரச்சினைகளே அதிகளவில் முறைப்பாடு செய்யப்படுகின்றது.

சரியான ஆவணங்களுடன் முறைப்பாடுகள் செய்யப்படுமிடத்து நீதிமன்றத்தின் உதவியுடன் பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

மக்கள் தமக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் முறைப்பாடுகளை செய்வதற்கு பொது இடங்கள் தோறும் முறைப்பாட்டு பெட்டி வைக்க தீர்மானித்துள்ளோம். அதுமட்டுமன்றி பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை செய்வதற்கு மாதிரிப் படிவம் வழங்கப்படவுள்ளது. பெயர், விலாசம், என்ன பிரச்சினை போன்ற விடயங்கள் இதில் உள்ளடக்கப்படும்.


இவை தமிழில் வழங்கப்படும் மாதிரிப் படிவமாகும். இதன் மூலம் இலகுவாக தமது முறைப்பாடுகளைச் செய்ய முடியும்.

இது தவிர பிரச்சினைகள் தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்வதற்கு அவசர தொலைபேசி இலக்கங்களும் மிக விரைவில் வழங்கப்படவுள்ளது.

இங்கு மேற்கொள்ளப்படும் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் இந்த விழிப்புணர்வு கருத்தரங்கு உதவிபுரியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

# ஓரிரு வருடங்களில் யாழ்தேவி புகையிரதம் காங்கேசன்துறையை நோக்கி பயணிக்கும்

## அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த உறுதிமொழி



வடபகுதி மக்கள் இழந்துவிட்ட சுதந்திரத்தை தற்போது பெற்றுள்ளனர் என பெற்றோலிய வள அமைச்சர் சுசில் பிறேமஜெயந்த தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட தலைமைச் செயலகம் மற்றும் சுதந்திர தொழிலாளர் சங்க அலுவலகம் நேற்று முன்தினம் கோயில் வீதியில் திறந்துவைக்கப்பட்டது.

இதில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அக்காலத்தில் இருந்த எமது ஆட்சியாளர்களினால் அல்பிறட் துரையப்பா எவ்வாறு மாநகர முதல்வராக தெரிவு செய்யப்பட்டாரோ அவ்வாறே இன்று அங்கஜனையும் எமது ஆளும் கட்சி தெரிவு செய்துள்ளது. படித்த புத்திஜீவிகளைக் கொண்ட யாழ்.குடாநாட்டில் உள்ளவர்கள் அரசியலை தெளிவாக விளங்கிக்கொள்வர். இதனால்தான் புத்திஜீவிகளை பிரதிநிதிகளாக நியமித்துள்ளோம்.

கடந்தகாலங்களில்ஆளுங்கட்சிக்கு நீங்கள் வழங்கிய ஆதரவுக் கரத்தை நாம் பல மடங்கு பெருக்குவற்கு இவ் அலுவலகம் உதவும் என நம்புகிறேன்.

இம்மாவட்டத்தில் வாழ்ந்து வருகின்ற பல்லின மக்கள் கடந்த 25 வருட வாழ்க்கையை துன்பத்திலேயே கழித்துள்ளனர். இவற்றுக்கான விடிவு காலத்தை எமது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ காலத்தில் அனுபவிக்கிறீர்கள். நீங்கள் அனுபவித்த துன்பமும் அவரது காலத்திலேயே நீக்கப்பட்டுள்ளது. கடந்த 25 வருடத்தில் நாட்டின் அபிவிருத்தி நோக்கி நாம் நகரவில்லை. இன்று அதற்கான காலம் கனிந்துள்ளது. நாம் அபிவிருத்திப் பாதைக்குள் எம்மை இட்டுச் செல்ல தயாராக வேண்டும்.

இன்னும் ஓரிரு வருடங்களில் யாழ். தேவி காங்கேசன்துறை நோக்கிய தனது பயணத்தை தொடங்கும் அதைவிட எம்மால் அபிவிருத்தி செய்யப்பட்ட சங்குப்பிட்டி ஏ32 வீதியையும் குறிப்பிடலாம். அத்துடன் யாழ்.போதான வைத்திய சாலைக்கு நவீன வசதிகளுடன் கூடிய கட்டடம் ஒன்றையும் அமைக்க நடவடிக்கை எடுத்துவருகிறோம். யாழ். மாவட்டம் பல அபிவிருத் திட்டங்களை வெற்றிகரமாக மேற்கொண்டு வருவதையிட்டு நான் பெருமிதம் அடைகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-4)

# நவோதயா வார நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யா/வேலணை மத்திய கல்லூரியின் நவோ தயா வாரம் கடந்த முதலாம் திகதி ஆரம் பமாகி நாளை மறுதினம் வியாழக் கிழமை வரை நடைபெறும்.

இந்நிகழ்வின் ஆறாம் நாள் நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்ப மாகும்.

இன்றைய நாளில் கணித, விஞ்ஞான, தகவல் தொழில்நுட்ப நாள் கண்காட்சி நிக ழ்வு நடைபெறும்.

பிரதமவிருந்தினராக தீவககல்வி வலய ஆசிரிய ஆலோசகர் நா.அம்பிகைபாகன், சிறப்பு விருந்தினர்களாக தீவக வலய கணனி வள நிலைய முகாமையாளர், என்.பால மகிந்தன், பாடசாலை அபிவிருத்தி சபை உறுப் பினர் எஸ்.பாலகிருஸ்ணன் ஆகியோர் கல ந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## இறைவனை மட்டுமே சார்ந்திரு!



மனிதத்துணை அனைத்தையும் விட இறைவன் எல்லையற்ற பெருமையை உடையவனாகிறான். இறைவனிடம் நம்பிக்கை கொள். அவரையே எப்போதும் சார்ந்திரு. அப்போது நன்னெறியில் செல்வாய்.எதனாலும் உன்னை வெல்ல முடியாது.

இறைவனது தொண்டர்களுக்குத் தொண்டு செய்பவர்கள் அவரது உத்தமத் தொண்டர்கள் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

பொருளாதார மதிப்பு இருக்கின்ற மதமே வெற்றி பெறும். ஆயிரக்கணக்கான ஒரே விதமதப் பிரிவுகள் ஆதிக்கத்திற்குப் பாடுபடலாம். ஆனால் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பவர்களே ஆதிக்கத்தைப் பெறுகின்றன.

ஒரு இலட்சிய மதத்தின் நோக்கம் இவ்வுலக வாழ்விற்கும் உதவ வேண்டும். மறு உலகிற்கும் வழிகாட்ட வேண்டும். அதே வேளையில் இறப்பையும் ஏற்க அது ஒருவனை ஆயத்தம் செய்யவும் வேண்டும்.

மதத்தைப் பற்றிக் கொண்டு சண்டையில் இறங்காதே. மதச் சண்டைகளும் வாதங்களும் அறிவின்மையின் அறிகுறி. தூய்மையும் அறிவும் வெளியேறி இதயம் வறளும் போதுதான் சண்டைகள் தொடங்கும். அதற்கு முன்னால் அல்ல.

# அரசமைப்பு சட்டத்திற்கு உட்பட்டதாகவே லோக்பால் மசோதா இருக்க வேண்டும்

## பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்து



(புதுடில்லி)

அரசமைப்புச் சட்டத்துக்கு உட்பட்டதாகவே லோக்பால் மசோதா இருக்க வேண்டும் என பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்தியுள்ளார்.

லோக்பால் விசாரணை அமைப்பின் வரம்பில் பிரதமர்,நீதிபதிகள், பாராளுமன்ற உறுப்பினர்களும் சேர்க்கப்பட வேண்டும். என்ற பொது மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்கவில்லை.

காங்கிரஸ், பாரதிய ஜனதா உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களை சந்தித்து அன்னா ஹசாரே தலைமையிலான பொதுமக்கள் பிரதிநிதிகள் ஆதரவு திரட்டி வருகின்றனர்.

இந்நிலையில் டில்லியில் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் லோக்பால் வரைவு மசோதா குறித்து விவாதிக்க அனைத்துக் கட்சிகளின் கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவிக்கையில்,

ஊழலுக்கு எதிராக கடுமையான சட்டங்கள் தேவை. அதேசமயம் அச்சட்டம் எளிமையானதாகவும் வெளிப்படையானதாகவும் இருக்க வேண்டும்.

பிரதமர் உள்ளிட்ட உயர் பதவிகளில் உள்ளவர்களுக்கு எதிரான ஊழல் புகார்களை விசாரித்து கடுமையான தண்டனை வழங்க இப்போதுள்ள சட்டங்கள் போதுமானதாக இல்லை என்ற கருத்து உள்ளது.

உயர் நிலைகளில் உள்ளவர்கள் மீதான ஊழல் புகார்களை விசாரிக்க வலுவான லோக்பால் மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது. அச்சட்டத்தின் மூலம் ஊழல் புகார்கள் விரைந்து விசாரிக்கப்பட்டு கடுமையான தண்டனை அளிக்கப்பட வேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது. இதை மழைக்கால பாராளுமன்றக் கூட்டத் தொடரில் நிறைவேற்றுவதில் அரசு தீவிரமாக உள்ளது.

ஆனால் பொதுமக்கள் பிரதிநிதிகளின் சில கோரிக்கைகள் இணையான அரசுக்கு வழிவகுக்கும் என்று அச்சம் உள்ளது. லோக்பால் அமைப்பின் செயற்பாடு அரசமைப்பு சட்டத்துக்குட்பட்டே இருக்க வேண்டும்.

லோக்பால் சட்டம் மற்ற சட்டங்களிலிருந்தும் ஜனநாயகத்தின் அடிப்படை விதிகளிலிருந்தும் திசை மாறக்கூடாது. அரசமைப்புச் சட்டத்தில் ஏற்கனவே உள்ள சட்டவிதிகளை லோக்பால் மசோதாவில் சரியான இடம்பெற செய்ய வேண்டும்.

அரசு உத்தேசித்துள்ள திட்டம் சமுதாயம் மற்றும் ஒட்டுமொத்த நாட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டது. இப்போது ஊழல் தலையாயப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது என்பதை மறப்பதில்லை.

ஊழல் தடுப்புச் சட்டம், அந்நிய செலாவணி மோசடி தடைச் சட்டம், மத்திய கண்காணிப்பு ஆணையச் சட்டம், தகவல் அறியும் சட்டம் போன்றவை ஊழலுக்கு எதிராக ஏற்கனவே உள்ளன. அதில் கடுமையான தண்டனை அளிக்கும் விதிகளும் உள்ளன.

லோக்பால் வரைவு மசோதாவை உருவாக்குவதில் ஒரு சிலவற்றை தவிர மற்றவற்றில் கருத்து ஒற்றுமை உள்ளது. எனவே அதிமுக்கியத்துவம் வாய்ந்த லோக்பால் மசோதாவில் கருத்து வேறுபாடுகளை களையும் நோக் கத்துடன் அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டதாக பிரதமர் மன்மோகன் சிங் கூறினார். (ஸ்ரீ-4)

## இலங்கை அரசுக்கு எதிராக தமிழக இளைஞர்கள் போராட்டம்

யுத்த காலத்தில் அப்பாவித் தமிழ் மக்களை கொன்ற இலங்கை அரசுக்கு எதிராக இந்திய அரசு உடனடியாக கவனம் செலுத்த வேண்டும் எனக் கோரி சென்னை இளைஞர்கள் யுத்த குற்றம் மற்றும் இனப்படுகொலைக்கு எதிரான இளைஞர்கள் என்ற பதாகை தாங்கி போராட்டம் ஒன்றினை நேற்று முன்தினம் நடத்தியுள்ளன என சர்வதேச ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

மேலும் தமிழக சட்டசபையில் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவால் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை இந்திய மத்திய அரசும் நிறைவேற்ற வேண்டும் என இளைஞர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் தமிழீழ ஆதரவாளர் மற்றும் திரைப்பட இயக்குநரான மணிவண்ணனும் மற்றும் தமிழர் ஆதரவான பல அரசியல் தலைவர்களும் கலந்து கொண்டுள்ளனர். (ஸ்ரீ-4)

## பாரதச் செய்திகள்



# ஆந்திராவில் அரசியல் சட்ட நெருக்கடி ஜனாதிபதி ஆட்சி அமுலாகுமா?


(சென்னை)

ஆந்திராவில் தெலுங்கானா விவகாரத்தால் அரசியல் சட்ட ரீதியிலான நெருக்கடி ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளதாகக் கருதப்படுவதால் அங்கு ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஆந்திராவை இரண்டாகப் பிரித்து தெலுங்கானா தனி மாநிலம் அமைக்க வேண்டும் என்ற தெலுங்கானா பகுதி மக்களின் கோரிக்கையை மத்திய அரசு கண்டு கொள்ளவில்லை. அதிருப்தி அடைந்துள்ள தெலுங்கானா பகுதி மக்கள் தங்கள் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மக்கள் பிரதிநிதிகளை இராஜினாமா செய்யும்படி வற்புறுத்தி வருகின்றனர்.

நிலைமை மோசமாவதை உணர்ந்த மக்கள் பிரதிநிதிகள் தங்கள் பதவிகளை இராஜினாமா செய்ய முன் வந்துள்ளனர். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ.மற்றும் எம்.பி.க்கள் தான் இதில் தீவிரமாக உள்ளனர். மத்தியிலும் மாநிலத்திலும் காங்கிரஸ் ஆட்சி நடப்பதால் தெலுங்கானா தனி மாநிலம் அமைக்கும் பொறுப்பு காங்கிரஸ் கட்சியினருக்குத் தான் அதிகம் உண்டு என மக்கள் கருதுகின்றனர். இதன் காரணமாக தனி மாநில கோரிக்கை குறித்த அறிவிப்பை வெளியிடாவிட்டால் தங்கள் பதவிகளை இராஜினாமா செய்யப் போவதாக காங்கிரஸ் கட்சியின் எம்.எல்.ஏ. மற்றும் எம்.பி.க்கள் அதிரடியாக அறிவித்துள்ளனர்.

ஆந்திர சட்டசபையில் மொத்தம் 294 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் 119 பேர் தெலுங்கானா பகுதியைச் சேர்ந்தவர்கள். இந்த 119 பேரில் 50 பேர் காங்கிரசைச் சேர்ந்தவர்கள்.



இந்த 50 பேரும் தங்கள் பதவிகளை இராஜினாமா செய்தால் ஆந்திராவில் காங்கிரஸ் அரசு கவிழ்வதோடு வேறு பல சட்டச் சிக்கல்களும் ஏற்படும். புதிதாக ஆட்சி அமைப்பது தொடர்பாகவும் அடுத்த கட்ட அரசியல் நடவடிக்கைகளை செய்வது தொடர்பாக சட்ட நெருக்கடியும் குழப்பமும் உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

அரசியல் சட்ட ரீதியிலான நெருக்கடியை தவிர்க்கும் வகையில் ஆந்திராவில் ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்தும் படி மத்திய அரசை கேட்டுக் கொள்ளலாமா என்பது குறித்தும் காங்கிரஸ் தலைவர்கள் ஆலோசித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனால் ஆந்திர அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பும் பொது மக்களிடையே பதற்றமும் ஏற்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# இலங்கை தமிழர் ஒருமைப்பாட்டு தினத்தை முன்னிட்டு சுடரேந்தி உறுதியேற்கும் நிகழ்ச்சி

## தஞ்சை திலகர் திடலில் ஏற்பாடு


இலங்கை தமிழ் ஒருமைப்பாட்டு நாளை முன்னிட்டு இந்திய தஞ்சை மாவட்ட திலகர் திடலில் சுடரேந்தி உறுதியேற்கும் நிகழ்ச்சி எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இலங்கை தமிழர் தேசிய ஒருமைப்பாட்டு தினத்தை சிறப்பாக நடத்துவது தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம் தஞ்சையில் அமைந்துள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகத்தில் அக்கட்சியின் மாவட்டச் செயலாளர் திருஞானம் தலைமையில் நடைபெற்றுள்ளது.

தமிழ் தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் அய்யனாபுரம் முருகேசன், நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் நல்லதுரை, தமிழ் தேச பொதுவுடைமை கட்சியின் மாவட்டச் செயலாளர் பழ.ராசேந்திரன், தமிழர் தேசிய பேரவை தலைவர் துரை குபேந்திரன் மற்றும் மக்கள் விடுதலை கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் அருணாசலம் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். எதிர்வரும் 8 ஆம் திகதி இந்தியா முழுவதும் இலங்கை தமிழர் ஒருமைப்பாட்டு நாள் இடம்பெறுவதை முன்னிட்டு தஞ்சை திலகர் திடலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் சுடரேந்தி உறுதியேற்கும் நிகழ்ச்சியை சிறப்பாக நடத்த வேண்டும் என இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.


அத்துடன் கட்சி சாதி, மத , பேதங்களை கடந்த தமிழின உணர்வாளர்கள், ஜனநாயக மற்றும் முற்போக்கு சக்திகள் அனைவரும் எதிர்வரும் 8 ஆம் திகதி அணிதிரள வேண்டும் என இலங்கை தமிழர் ஒருமைப்பாட்டு தின கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அதேவேளை இந்நிகழ்வில் சனல் 4 தொலைக்காட்சியின் இலங்கையின் கொலைக்களம் எனும் ஆவணப்படமும் காட்சிப் படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)



லோக்பால் மசோதா தொடர்பான அனைத்துக் கட்சிக்கூட்டம் டில்லியில் இடம்பெற்றது. இதில் பா.ஜ.மூத்த தலைவர்கள் அத்வானி, சுஷ்மா சுவராஜ், அருண்ஜேட்லி உள்ளிட்டோர் கலந்து கொண்டதைப் படத்தில் காணலாம்.

# கோப்பையை வென்றார் ஜோகோவிச் நடால் கனவு தகர்ந்தது



கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் போட்டி லண்டன் நகரில் நடந்தது. நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் உலகின்நம்பர் வன் வீரரான ரபெல் நடால் (ஸ்பெயின்) 2-ம் நிலை வீரரான நோவாக் ஜோகோவிச் (செர்பியா) மோதினார்கள்.

இப்போட்டியில் பட்டம் வென்று அசத்தினார் நோவாக் ஜோகோவிச். நேற்றுமுன்தினம் நடந்த விறுவிறுப்பான இறுதிப்போட்டியில் ரபெல் நடாலை மிகச் சுலபமாக வீழ்த்தினார்.

லண்டனில் கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்துப்பெற்ற 125-வது விம்பிள்டன் டென்னிஸ் தொடர் நடந்தது. நேற்றுமுன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் உலகின் தரவரிசையில் முதலிரண்டு வீரர்களான ஸ்பெயினின் நடால் (25 வயது), செர்பியாவின் நோவாக் ஜோகோவிச் (24 வயது) மோதினர்.

ஐந்தாவது முறையாக விம்பிள்டன் இறுதிப்போட்டியில் விளையாடிய நடப்பு சம்பியன் நடால் ஆரம்பத்திலிருந்தே திணறினார். இதனைப் பயன்படுத்திய உலகின் நம்பர்-2 வீரரான ஜோகோவிச் முதல் செட்டை 6-4 என சுலபமாக வென்றார்.

2வது செட்டிலும் ஆதிக்கம் செலுத்திய இவர் 6-1 என வென்று மிகப்பெரும் அதிர்ச்சியை கொடுத்தார்.

மூன்றாவது செட்டில் எழுச்சி கண்ட உலகின் நம்பர் -1 வீரரான நடால் 6-1 என வென்று பதிலடி கொடுக்க ஆட்டத்தில் சூடு பிடித்தது

**புதிய சம்பியன்**

பரபரப்பான நான்காவது செட்டில் இரு வீரர்களும் மாறிமாறி கேம்களை கைப்பற்ற ஆட்டத்தில் விறுவிறுப்பு எகிறியது. இந்த நேரத்தில் நடால் மீண்டும் தடுமாற ஜோகோவிச் சம்பியன் பட்டத்தை உறுதி செய்தார்.

இறுதியில் ஜோகோவிச் 6-4, 6-1, 1-6, 6-3 என்ற செட்களில் வெற்றி பெற்று விம்பிள்டன் பட்டத்தை முதல் முதலாக கைப்பற்றினார். மீண்டும் பட்டம் வெல்லும் நடாலின் கனவு தகர்ந்து போனது.

தனது வெற்றி குறித்து ஜோகோவிச் கூறுகையில், விம்பிள்டனில் பட்டம் வெல்ல வேண்டும் என்ற எனது இளமைக் கால கனவு நனவாகியுள்ளது. இது எனது வாழ்வில் மிகச்சிறந்த நாள் என்றார்.

**முதல் வீரர்**

விம்பிள்டனில் பட்டம் வெல்லும் முதலாவது செர்பிய வீரர் என்ற வரலாறு படைத்தார் ஜோகோவிச். ஏற்கெனவே அவுஸ்ரேலிய ஓபனில் இரு முறை (2008,2011)பட்டம் வென்ற இவர் நேற்றுமுன்தினம் தனது 3 வது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை கைப்பற்றினார்.

**நம்பர் -1**

புதிய டென்னிஸ் தரவரிசைப் பட்டியலின்படி ஜோகோவிச் முதலிடத்துக்கு முன்னேறுகின்றார். இரண்டாவது இடத்திற்கு நடால் தள்ளப்படுகின்றார் .

இந்த ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாமான அமெரிக்க ஓபன் ஓகஸ்ட் மாதம் நடக்கிறது. விம்பிள்டன் பட்டத்தை முதல் முறையாக கைப்பற்றியது குறித்து ஜோகோவிச் கூறியதாவது;

விம்பிள்டன் பட்டத்தை வெல்ல வேண்டும் என்பது சிறுவயதிலேயே கனவாக இருந்தது அந்த கனவு தற்போது நனவானது இந்த வெற்றி எனக்கு மிகவும் மகிழ்ச்சியை அளித்துள்ளது .

விம்பிள்டன் பட்டத்தை வென்ற இந்த நாள் எனது வாழ்க்கையில் மிகவும்சிறந்தநாள் ஆகும். இவ்வாறு அவர் கூறினார்.

11-வது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை தவறவிட்ட நடால் தோல்வி குறித்து கூறியதாவது;

ஜோகோவிச்சின் ஆட்டம் மிகவும் பிரமாதமாக இருந்தது.



என்னால் வெற்றி பெறுவது என்பது முடியாததாக இருந்தது.எனது அனுபவம் எந்த வகையிலும் அவரைக்கட்டுப்படுத்தவில்லை.

இந்த ஆட்டத்தில் நான் சில தவறுகள் செய்தேன். இவ்வாறு அவர் கூறினார்.

# உலகக்கிண்ண வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி ஆரம்பமாகியது




நெதர்லாந்துடன் மோதும் இலங்கை வீராங்கனைகள்

13ஆவது உலகக்கிண்ண வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி சிங்கப்பூரில் நேற்று முன்தினம் கோலாகலமாக ஆரம்பமாகியது. இலங்கை உட்பட 16 அணிகள் இச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றுகின்றன. இறுதிப் போட்டி எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

சிங்கப்பூர் உள்ளக அரங்கில் நடைபெற்ற ஆரம்ப விழாவில் நடனங்கள், ஜிம்னாஸ்டிக் மற்றும் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெற்றன.

சர்வதேச வலைப்பந்தாட்டச் சங்கங்களின் சம்மேளத் தலைவி மொல்லிரோன் மற்றும் உள்ளூர் ஏற்பாட்டுக்குழுவின் தலைவி ஜெஸிக்கா பான் ஆகியோர் 16 அணிகளையும் வரவேற்றனர்.

இரண்டாவது தடைவையாக சிங்கப்பூரில் உலகக்கிண்ண வலைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டி நடைபெறுகிறது.

ஆசிய சம்பியனான இலங்கை அணியின் வெற்றிகளுக்கு 6 அடி 10 அங்குல உயரமான தர்ஷினி சிவலிங்கம் கைகொடுப்பார் என நம்பப்படுகிறது. தற்போது உலகின் மிக உயரமான வலைப்பந்தாட்ட வீராங்கனையாக அவர் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

முதல் தடவையாக அவர் உலகக்கிண்ணப் போட்டிகளில் பங்கு பற்றுகிறார். இலங்கை அணி தனது முதல் போட்டியில் வட அயர்லாந்தை எதிர்கொள்கிறது.

**அணிகள்விபரம்**

குழு ஏ : அவுஸ்திரேலியா, இலங்கை, வட அயர்லாந்து, சமோவா

குழு பி : நியூசிலாந்து, டிரினிடாட், பிஜி, வேல்ஸ்

குழு சி : ஜமைக்கா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா, பொட்ஸ்வானா,

குழு டி : இங்கிலாந்து, மாலாவி, பார்படோஸ், மலேஷியா.

# உலகக்கிண்ண கால்பந்து தகுதிப்போட்டி பிலிப்பைன்ஸிடம் வீழ்ந்தது இலங்கை

2014 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்தாட்டத் தொடருக்கான தகுதிகாண் போட்டியில் பிலிப்பைன்ஸிடம் தோல்வியுற்று இலங்கை வெளியேறியுள்ளது.

கடந்த புதன்கிழமை கொழும்பில் நடைபெற்ற இரு அணிகளுக்கும் இடையிலானபோட்டி 1-1 என்ற கோல் விகிதத்தில் சமநிலையில் முடிவுற்றது.



எனினும் நேற்று முன்தினம் பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் பிலிப்பைன்ஸ் அணி 4-0விகிதத்தில் இலங்கையை தோற்கடித்தது.

ரிஸால் ஞாபகார்த்த அரங்கில் நடைபெற்ற இப்போட்டியில் ஆரம்பத்திலிருந்து பிலிப்பைன்ஸ் அணி ஆதிக்கம் செலுத்தியது.

இடைவேளையின் போது அவ் வணி 2-0 விகிதத்தில் முன்னிலையில் இருந்தது. இடைவேளையின் பின் மேலும் இரு கோல்களை பிலிப்பைன்ஸ் அணி அடித்தது.

இப்போட்டியை 13ஆயிரம் ரசிகர்கள் நேரில் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. இப் போட்டியுடன் இத் தொடருக்கான தகுதிகாண் போட்டிகளிலிருந்து இலங்கை வெளியேறியுள்ளது.

## பொலிஸ்...

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு பகுதிகளில் சிறப்பு அதிரடிப்படையின் பிராந்தியத் தளபதி மற்றும் இணைப்பு அதிகாரியாகவும் அவர் பணியாற்றி இருந்தார்.

அத்துடன் சிறப்பு அதிரடிப்படையின் முதலாவது பிரதித் தளபதியாகவும் இவர் கடமை புரிந்துள்ளார். (எ)

## தமிழினியின்...

தமிழினியின் சட்டத்தரணியினால் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

பொதுவாக தடுப்புக்காவல் கைதிகள் சிறைச்சாலை மருத்துவமனை மற்றும் நீதிமன்றம் என்பவற்றுக்கு மட்டுமே நீதிமன்றத்தின் அனுமதியின்றி அழைத்துச் செல்லப்பட முடியும் அவ்வாறின்றி தடுப்புக்காவல் கைதியிடம் சிறைச்சாலையில் வைத்து விசாரணை நடத்தவும் பொலிஸார் நீதிமன்றத்தின் அனுமதியை முற்கூட்டியே பெற்றிருக்க வேண்டும்.

ஆனால் தமிழினி அவ்வாறான நடைமுறைகள் அப்பட்டமாக மீறப்பட்ட நிலையில் தடுப்புக்காவல் கைதியாக இருந்த நிலையிலேயே பயங்கரவாத தடுப்புப்பிரிவின் அலுவலகத்திற்கு இரண்டு தடவைகள் அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார் என அவரது சட்டத்தரணியால் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

அச்சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. அத்துடன் எதிர்வரும்18ஆம் திகதி வரை அவருக்கான விளக்கமறியல் உத்தரவும் நீடிக்கப்பட்டுள்ளது. (எ)

# வடக்குக்கு வருவதற்கான...

வடக்குக்கு வெளிநாட்டவர்கள் பயணிப்பதற்கு இருந்த கட்டுப்பாடு களை நேற்றுத் திங்கட்கிழமை முதல் தளர்த்துவதாக இலங்கை அரசாங் கம் அறிவித்துள்ளது.

வெளிநாட்டு கடவுச்சீட்டு வைத் திருப்போர் வடக்கே பயணிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சின் விசேட அனுமதியை பெற்ற பின்னரே அங்கு செல்ல முடியும் என்று முன் னர் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு கள் இனி இருக்காது என்று தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக நிலையத்தின் இயக்குநர் லக்ஸ் மன் ஹுலுகல்ல தெரிவித்தார்.

பயணிகளின் பாதுகாப்பு கரு தியே இந்த தடைகள் முன்னர் இருந் தன. தற்போது வடக்கில் அமைதி முற்றுமுழுதாக உறுதிப்படுத்தப் பட்டு விட்டதால் இனி இந்த கட்டுப் பாடுகளுக்கு அவசியமில்லை.

சர்வதேச மற்றும் உள்நாட்டு ஊடகவியலாளர்கள் வடக்குக்கு பய ணிக்க முன்னர் இருந்த தடைகளும் தளர்த்தப்பட்டுள்ளது.

வடக்கே யாழ்ப்பாணம் தவிர ஏ9 வீதிக்கு வெளியே வன்னியின் எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் எவரும் பயணிக்க முடியுமா என்று கேட்டதற்கு பதிலளித்த அவர் ஏனைய பகுதிகளுக்கு பயணிப்பதைப் போல எவரும் நாட்டில் எந்த இடத்துக்கும் பயணிப்பதில் இனி எந்தத்தடையும் இருக்காது என்று கூறினார்.

ஆனால் வன்னியில் நிலக் கண்ணிவெடிகள் அகற்றப்படாதுள்ள சில கிராமங்களில் மட்டும் பயணத் தடை தொடர்ந்தும் அமுலில் இருக் கும் என்று தேசிய பாதுகாப்பு தொடர் பான ஊடக நிலையத்தின் இயக்கு நர் கூறினார்.

இதேவேளை அரச சார்பற்ற நிறுவனங்களும் வடக்கில் எந்த இடத்துக்கும் சென்றுவர எவ்வித தடையும் இல்லை என்கின்ற போதி லும் அந்த நிறுவனங்கள் அங்கு தமது பணிகளை மேற்கொள்ள வேண்டுமானால் ஜனாதிபதி பணி யகத்தின் சிறப்பு நிகழ்ச்சித்திட்டம் ஊடாகவே அவற்றை மேற்கொள்ள முடியும் என்று லக்ஷ்மன் ஹுலு கல்ல தெரிவித்தார்.

இதேவேளை வெளிநாட்டு கட வுச்சீட்டு வைத்திருப்பவர்கள் பாது காப்பு அமைச்சின் அனுமதியின்றி ஓமந்தை சோதனைச் சாவடியை தாண்டி வடக்குக்கு பயணம் செய்ய முடியாத நிலை இருந்தமை குறிப் பிடத்தக்கது. (எ)

# பராக் ஒபாமா கொல்...

தலும் மேற்கொள்ளப்படவில்லை என்பதே உண்மையாகும்.

அமெரிக்காவின் அயோவா மாநிலத்தின் உணவு விடுதி ஒன் றில் வைத்து ஜனாதிபதி பராக் ஒபாமா சுட்டுக்கொல்லப்பட்டதாக மேற்படி டுவிட்டர் செய்தியில் தெரிவிக்கப்பட் டது.

இரு துப்பாக்கிக் குண்டுகள் அவரை தாக்கியதாகவும் கூறப்பட் டது. நேற்று யூலை 4 ஆம் திகதி அமெரிக்க தேசிய தினத்தை அமெ ரிக்கர்கள் கொண்டாடிக் கொண்டி ருக்கும் நிலையில் வதந்தி பரப்பப் பட்டுள்ளது.

பராக் ஒபாமா காலமானார். ஜனாதிபதி கொல்லப்பட்டார். மிகத் துயரமான யூலை 4 உண்மையில் ஜனாதிபதி பராக் ஒபாமா கொல்லப் பட்டார் என அச் செய்தியில் குறிப் பிடப்பட்டிருந்தது.

அச் செய்தி வெளியாகி சுமார் ஒரு மணித்தியாலத்தின் பின் புதிய ஜனாதிபதி ஜோபிடனுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டிருந்தது.

மூன்று மணித்தியாலங்கள் வரை இச்செய்திகள் எதுவும் அந்த இணையத்தளத்தில் இருந்து அகற் றப்படாமல் இருந்தன.

ஸ்கிரிப்ட் கிடீஸ் எனும் நபர் அல் லது குழுவினால் இந்த ஊடறுப்புக் குக்கு உரிமை கோரப்பட்டுள்ளது.

பொக்ஸ் நியூஸ் தொலைக்காட் சியின் செய்திகள் அமெரிக்காவில் அதிகம் பார்க்கப்படும் கேபிள் தொலைக்காட்சி செய்திகளாக விளங்குகின்றன. சுமார் இரண்டு கோடி பேர் இச் செய்தி ஒளிபரப்புக் களை பார்வையிடுவதாக தெரிவிக் கப்படுகிறது. (எ)

உல்லாசம் உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL

No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com

# கிழக்கு மாகாணத்...

யிலேயே ஊடகவியலாளர்களிடம் அவர் மேற்கண்ட கருத்தை வெளி யிட்டிருந்தார்.

நாட்டினுள் பயங்கரவாதம் முற் றாக தோற்கடிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் கழிய முன்பே மீண்டும் பயங்கரவாத நடவடிக்கைகள் தலை தூக்குவதற்கான சமிக்ஞைகள் வெளிப்படையாகவே தென்படத் தொடங்கியுள்ளன.

அண்மையில் கிழக்கு மாகாணத் தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு மற்றும் வங்கிக் கொள்ளைச் சம்ப வங்களை அதன் ஒரு கட்டமாக நாம் கருத வேண்டியுள்ளது என்றும் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித் துள்ளார்.

அதேநேரம் வெள்ளைக்கொடி வழக்கின் பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகளிடம் மேற்கொள்ளப்பட்ட குறுக்கு விசாரணைகள் நேற்றுடன் முடிபடைந்துள்ளன. நேற்றைய தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் பிர தித்தலைவர் கரு ஜெயசூரிய மற்றும் பேராசிரியர் அஷ்லி ஹல்பே ஆகி யோர் பிரதிவாதி தரப்பில் சாட்சிய மளிக்க நீதிமன்றத்தினால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. (எ)

# இராணுவ உடையில்...

தயாரிப்பதன் மூலம் வீணான முயற்சி யில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதேவேளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அண்மையில் ஐ.நா வின் இலங்கைக்கான தூதுவரும் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதியுமான மேஜர்ஜெனரல் சவேந்திர சில்வா உரை யாற்றுகையில், சனல் 4 ஆவணத்தில் வெளியாகும் சிங்கள உரையாடல் ஆவ ணம் சித்தரிக்கப்பட்டிருக்கும் சூழ் நிலைக்கு சிறிதும் பொருத்தமில்லை எனவும் கூறினார்.

மேற்படி ஆவணத்தில் தனிப்பட்ட நபர்கள் இராணுவ சீருடையில் காணப் படுவதனை சுட்டிக்காட்டிய மேஜர் ஜென ரல் சவேந்திர சில்வா, இதற்கு முன்னதா புலிகள் ஸ்ரீ மகாபோதி வளவிலுள்ள அப்பாவி பக்தர்களை கொலை செய்த போதும் கட்டுநாயக்க விமான நிலைய தாக்குதலின் போதும் இராணுவ சீருடை யில்தோன்றியிருந்ததைநினைவுகூறினர்.

மேலும்சனல் 4 ஆவணமானது விடு தலைப்புலிகளின் ஆதரவாளர்களினால் சர்வதேச சமூகத்தை திசைத்திருப்புவதற் காக தயாரிக்கப்பட்டதொன்றாகும் என் றும் அவர் கூறினார். (எ-4)

CSC COMPUTER EDUCATION INDIA
ISO 9001 : 2000 CERTIFIED TRAINING CENTRE

கிராபிக்ஸ், அனிமேஷன்
மல்டிமீடியா, வீடியோ எடிடிங்
பயிற்சிகளுக்கு சிறப்புக் கட்டணச் சலுகை!

- 100% செயல்முறைப்பயிற்சி
- இலவச பாடநூல்கள்
- சர்வதேச தர சான்றிதழ்கள்
- தவணை முறை கட்டண வசதி
- மாணவர் விரும்பிய பயிற்சி நேரங்கள்
- அனுபவம் மிக்க விரிவுரையாளர்கள்

ASIAN COMPUTER EDUCATION

| 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் T.P : 021-222 5677 | கொடிகாமம் வீதி, நெல்லியடி T.P : 021-2262399 | 230,1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி T.P : 021-2270267 |
|---|---|---|

விசேட விலைக் கழிவில் புதிய கணினிகள்

| | |
|---|---|
| Intel core 2 duo 2.4 GHz | Intel 3.0 GHz |
| G 41 D3 Mother Board | G 41 D3 Mother Board |
| 2GB DDR 3 RAM | 2GB DDR 3 RAM |
| 500 GB HDD | 500 GB HDD |
| DVD | DVD |
| 15" LCD Monitor | 15" LCD Monitor |
| Speaker | Speaker |
| Keyboard, Mouse | Keyboard, Mouse |
| 2 Years Warranty | 2 Years Warranty |
| Rs.39,500/= | Rs.32,500/= |

core i3, core i5 கணினிகள் மற்றும் கணினி உதிரிப்பாகங்கள் மலிவாகவும் உத்தரவாதத்துடனும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
PC MATE SYSTEMS
Computer Sales & Repair
174/16 Temple Road, Nallur
Tel : 021 222 4692

## தேவை

தரம் 10 பிள்ளைக்கு கணி தம், விஞ்ஞானம் கற்பிக்கக் கூடிய முன் அனுபவமுடைய ஆசிரியை தேவை . யாழ். நகரை அண்மித்து உள்ளவர் நன்று. 0775040714
(5491)

## துயர் பகிர்கின்றோம்



**செல்லையா வைத்தியநாதன்**

சுன்னாகம் நகர் தெற்கு- J/196 பிரிவின் முன்னாள் கிராம அலுவலரும், சமாதான நீதவானுமாகிய செல்லையா வைத்தியநாதன் இறைபதம் அடைந்த செய்தியை அறிந்து மிகுந்த வேதனையும் துயரமும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் உறவுகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுன்னாகம் நகர்
தெற்கு J/196
சுன்னாகம்.

கிராம அலுவலர்,
சமுர்த்தி உத்தியோகத்தர்,
J/196 பிரிவு மக்கள்

No Prior Qualifications
CIMA-UK 14000/= per level
Engineering-USA 4800/= per module
BIT University of Colombo 20000/= per year
Multimedia ~~15000~~, 4800/=
Closing Date 09.07.2011
SMS your name & course to 772395895 & Get Schol.
A/L 2011 மாணவர்களும் பதிவுசெய்து சலுகைகளைப் பெறலாம்.

USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Government Schol.
MCS
Supported By UNDP/JRRP
மேலதிக விபரங்களுக்கும் நேரில்,
324, Palaly Road,Campus Junction,Jaffna.
Free : BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Hardware, ICDL

## தேவை

கணினி ரைப்செற்றிங் செய் வதில் நல்ல அனுபவமுடையவர் தேவை.
கற்சுமி வெளியீடு
166, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
0718474325
(5491)

நாளை (06/07/2011) சுழிபுரம் - பறாளாய்
ஈசுர விநாயகரின் தேர்த் திருவிழா
நேரம் :- மு.ப. 11 மணியளவில்
ஈழநாட்டின் ஈசுர விநாயகா -உம் பக்தர்கள் குறை தீர்க்க விரைந்து வாரும்
சோழியூரான் - பிறை சூடிக்குரு

5488

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.